# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை (24-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:149


## இலங்கை அரசின் கடும்போக்குக் காரணமாக

# புலிகள் யுத்தநிறுத்தத்தை நீடிக்கவில்லை; ஆனால் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்பர்

## வன்னித் தலைமையகத்திலிருந்து அறிக்கை

வவுனியா,ஏப்ரல்24

**இன்று நள்ளிரவு காலாவதியாகும் தமது நான்கு மாத யுத்தநிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவு செய்துள்ளனர். எனினும் தமிழர் தேசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணும் நோர்வேயின் முயற்சியை தாம் ஆதரிப்பதாகவும் அதற்குத் தமது ஒத்துழைப்புத் தொடரும் என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.**

**இலங்கை அரசின் கடும்போக்கு மற்றும் போர்க்குணம் காரணமாகவே தாம் இந்தக் கவலை தரும் முடிவை எடுக்க நிர்பந்திக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் இது தொடர்பாக நேற்று வன்னித் தலைமையகத்திலிருந்து விடுத்த உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.**

எமது சமாதான நல்லெண்ணத்துக்குப் பதிலாக அரசாங்கம் செயற்படாதது மட்டுமன்றி; அதற்கு மறுப்புத் தெரிவித்தது மட்டுமன்றி, தரை, கடல், வான் வழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தி எமது தரப்புக்கு பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது. எங்களது சுயகட்டுப்பாட்டுடனான தற்காப்புத் தாக்குதல் தந்திரங்களைக் கைக்கொண்டதாலும் எதிர்த் தாக்குதல்களை நடத்தாமையாலும் எதிரியின் இராணுவத் தாக்குதலை எம்மால் முறியடிக்க முடியவில்லை. இத்தகைய ஆபத்தான நிலையில், எங்களது யுத்தநிறுத்தத்தை அரசாங்கம் தனது இராணுவ வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நிலையில் நாமே எமக்கு விதித்துக் கொண்ட யுத்தநிறுத்தத்தை நீடிக்க முடியவில்லை - என்று புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நாமே விதித்த சுய யுத்தநிறுத்தத்தை வாபஸ் பெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் ஆளாகியபோதிலும், நீண்டகாலப் பிரச்சினையான இனப்பிரச்சினையை அமைதி வழியில் தீர்க்கவேண்டும், அமைதியை

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தத்தைப் புலிகள் 220 தடைவைகள் மீறினராம்!

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.24

புலிகள் கடந்த நான்கு மாதங்களில் 220 தடைவைகள் யுத்தநிறுத்தத்தை மீறியுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண இவ்வாறு தெரி வித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தமது யுத்தநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பது பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் அரசு வன்னிப் பகுதிக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைத்தது. ஆனால் அதில் தாமதங்களும் பின்னடைவுகளும் ஏற்பட்டிருக்கலாம் - என்றும் அவர் தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் புலிகள் தென் பகுதியில் தாக்குதல்களைத் தவிர்த்துக்கொண்டமை பற்றிக் கருத்துத் தெரிவித்த பிரிகேடியர் கருணாரட்ண, தற்கொலைக் குண்டுதாரிகளின் கருவிகள் மற்றும் சாதனங்களைப் படையினர் மிக விழிப்புடன் இருந்து கைப்பற்றியது அதற்கு ஒரு காரணம். ஆயினும் விடுதலைப் புலிகள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை. அதனை நாங்கள் பாராட்டுகிறோம் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

## நிமால் கொலை விசாரணை:

# நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தாதீர்கள்!

### பொலீஸாரிடம் யாழ்.நீதிவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.24

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பாக சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் அக்கறை காட்டி வருவதனால் அது தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி சந்தேகநபர்களை நீதிமன்றில் நிறுத்தி நாட்டை அபகீர்த்தியிலிருந்து காப்பாற்றுமாறு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நிமலராஜன் கொலை தொடர்பான விசாரணை அறிக்கை நேற்று பொலீஸாரினால் யாழ்.நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பாக முன்னேற்றகரமான ஆதாரங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வல்லுறவுச் சம்பவம்:

# சந்தேகநபர்களில் ஐவர் அடையாளம் காட்டப்பட்டனர்

வவுனியா,ஏப்.24

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் இருவர் கொடூரமாகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரில் ஐந்து பேர் நேற்று அடையாளம் காட்டப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது சம்பந்தப்பட்ட இரு பெண்களும் சந்தேகநபர்களை அடையாளம் காட்டினர்.

கடற்படையைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் சிசில்குமார பிரதீப் நலிந்தகுமார, கடற்படைச் சிப்பாயான டி.பி.ஐ. பிரியதர்ஷன, நாசகாரத் தடுப்புப் பிரிவு பொலீஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த பற்றிக்கரவிர, கான்ஸ்டபிள்களான ராஜேந்திர,

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசைக் கவிழ்க்கும் உத்திகளை வகுக்க ஐ.தே.கவில் புதிய குழு!

கொழும்பு,ஏப்:24

அரசைக் கவிழ்ப்பது தொடர்பான உத்திகளை வகுக்கவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஐ.தே. கட்சி செயற்பாட்டுக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயற்பாட்டுக்குழுவில் ரணிலுடன் பிரதித்தலைவர் கருஜெயசூரிய உதவித் தலைவர் காமினி அத்துக்கோறளை, லொக்கு பண்டார ஆகி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர்கள் வன்னிக்கு

கொழும்பு,ஏப்.24

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இன்று விஜயம் செய்யும் ஆயர்கள் குழுவினர் அங்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

அங்குள்ள மக்களின் நிலையை நேரில் அறியும் நோக்குடன் செல்லும் ஆயர் குழுவினர் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்திப்பர் என்றும் - சமாதான வாய்ப்புக் குறித்து அப்போது அவர்களுடன் கலந்துரையாடுவர் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

ஆயர் குழு நேற்று கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தது. (ஐ-3)

## கல்விமான் பூரணம்பிள்ளை காலமானார்

யாழ்ப்பாணம்,ஏப்.24

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் புகழ்பூத்த அதிபரும், பிரபல கல்விமானும், சமூக சேவையாளருமாகிய க.பூரணம்பிள்ளை தமது 91ஆவது வயதில் லண்டனில் காலமானார்.

1943 - 67 ஆண்டு காலப்பகுதியில் இவர் அதிபராக இருந்த போது ஹாட்லிக் கல்லூரி இலங்கையில் புகழ்பெற்ற கல்லூரியாக விளங்கியது.

கல்வியில் மட்டுமல்லாது விளை

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் முடிவுக்கு அரசே முழுப் பொறுப்பு!

### மேற்குலக ராஜதந்திரிகள் கருத்து

கொழும்பு,ஏப்.24

விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக நடைமுறைப்படுத்திய யுத்தநிறுத்தத்தை மேலும் நீடிக்காமல் கைவிட்டதற்கான முழுப்பொறுப்பையும் ஸ்ரீலங்காஅரசே ஏற்கவேண்டும் என்று கொழும்பில் உள்ள மேற்குலக நாடு ஒன்றின் தூதரக அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

விடுதலைப்புலிகள் நடைமுறைப்படுத்திய யுத்தநிறுத்தம் மூலம் நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதைத் தக்கவாறு பயன்படுத்தி உருப்படியாக எதுவும் மேற்கொள்ளப்படாதது ஏமாற்றத்தை அளித்துள்ளது என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

இதேவிதமான கருத்தையே கொழும்பில் உள்ள ஏனைய பல நாடுகளின் தூதரக அதிகாரிகளும் கொண்டுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# சந்திரிகா - அனுரா லண்டனில் சந்தித்து நீண்ட நேரம் பேசினர்

கொழும்பு,ஏப்.24

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க கடந்த சனியன்று லண்டனில் தனது சகோதரியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுடன் விரிவான பேச்சு நடத்தியதாக கொழும்பு செய்தி வட்டாரங்களில் தகவல் வெளியாகியிருக்கிறது.

தனிபட்ட விஜயம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க, வழியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பதற்காக லண்டனில் தரித்து நின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் அங்கு சந்தித்து நீண்ட நேரம் பேசியதாகவும் -

தம்மை பதவி நீக்கம் செய்வதற்கு ஐ.தே.கட்சிக்குள் ஒருசாரார் திட்டம் தீட்டியிருப்பதாக அனுரா பண்டாரநாயக்க அப்போது ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோவில் தங்கியிருந்த சமயம் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து அவரை வெளியேற்ற முயற்சி எடுக்கப்படுவதான தகவலை அனுரா பண்டாரநாயக்கவே அவருக்குத் தெரியப்படுத்தியதாகவும் -

சபாநாயகர் பதவி வகித்துக் கொண்டு இவ்வாறு ஒரு கட்சியின் விடயங்களில் தலையிடுவது குறித்து ஐ.தே.கட்சியினுள் ஒருசாரார் அனுராவுக்கு எதிராகக் கடும் ஆட்சேபம் வெளியிட்டிருப்பதாகவும் -

தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்தே அனுரா பண்டாரநாயக்கவை கட்சியில் இருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனைப்பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற எமது நண்பனும், விரிவுரையாளருமான

**"கலாநிதி"**

**இராமநாதன் சாந்தன்**

B.A. (HONS). B.Ed. M. PHILL (CEY.)

அவர்கள் இறைவன் திருவருளால் மேலும் பல சிறப்புகளையும் வெற்றிகளையும் பெற மனமார வாழ்த்தும்

*யாழ்.பிரதேச செயலக நண்பர்கள்,*
திரு. திருமதி **R.A.G.**மோகன், சுமதி, வானதி, கியூமன், யோகேந்திரன், அன்ரனி பிறிற்றோ, தட்சாயினி, விஷாந்தி, வாகினி.

(c/16415)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும் தீவக அமைப்பாளருமாகிய

## உயர்திரு. நடராஜா மதனராஜா

**அவர்கள்**


மக்களுக்கான மகத்தான சேவையினை மேன்மேலும் வளம்படுத்த அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்துள்ளார். இவரின் மக்கள் சேவை மேலும் பிரகாசிக்க நாம் உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்,
அங்கத்தவர்கள்/பணியாளர்கள்,
ப.தெ.வள.அ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை.

(87055)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 06 - 06 - 1932



உதிர்வு 25 - 03 - 2001

## அமரர் மருதையனார் பொன்னம்பலம்

திங்கள் ஒன்று சென்றாலும், தீயில் நீங்கள் வெந்தாலும்
நெஞ்சம் மறக்குமா உங்கள் நினைவுகளை
நீங்கள் காட்டிய பாசத்தை அன்பு நேசத்தை - எம்
இதயத் தந்திகள் தினம் தினம் மீட்டும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இன்று (24-04-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நவாலி வடக்கு,*
*தழுவில் ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (87099)

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், **பேரப்பிள்ளைகள்.**

## மாதாந்தக் கொடுப்பனவு

உடுப்பிட்டி, ஏப்.24

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்தும் வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்தும் இடம்பெயர்ந்து உடுப்பிட்டி அஞ்சலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் இப்போது வழங்கப்படுகிறது என அஞ்சலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-154)

## நினைவு தின சொற்பொழிவு

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் சீலத்திரு அம்பலவாண நாவலர் நினைவு தினச் சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை சித்தன்கேணியில் அமைந்திருக்கும் சங்கப் பணிமனையில் புலவர் மணி க.மயில்வாகானனார் இந்நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (க)


**SHAMROCK**

J/ஈச்சமோட்டை வீதி
புலமைப் பரிசில் - Gr.5
ஆசிரியர் - **Mr.ஜனகன்**

- ஒவ்வொரு சனியும் பயிற்சிப் பரீட்சை
- சென்ற வருடம் எமது மாணவன் 180 அதிஉயர் புள்ளியைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (C/16417)

EDWARRDS MAKES

**GURUSANGEEVI**
குருசஞ்சீவி
(சிறந்த குரு தைலம்)

உயர்ந்த தரமான கறுவாதைலம், கராம்புதைலம், சஞ்சீவிதைலம், புல்லெண்ணெய், கற்பூரதைலத்துடன் மேலும் பல தைலங்களின் சங்கமம்.

GABRIEL EDWARRDS DISPENSARY
DR.G.EDWARRD,24, BUS STAND,
(87065) JAFFNA.

பொருளியல்
திரு.மோகன்
B.B.A.(HONS)

**A/L 2003**

கேள்விக்கோட்பாடு

Wed., Fri. 3.30 - 4.30
ஆரம்பம்:
25-04-2001 3.30 P.m.

**BEACON**
வெலிங்டன் சந்தி அருகில்

**லஷ்சுமி** இல்

3ஆவது கடைசி வாரம்
பிரசாந்த், சிம்ரன், கரண்
நடிப்பில்
**கண்ணெதிரே தோன்றினாள்**
(ரீலீஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
அதற்கு வெளியீடு
**வாஞ்சிநாதன்**

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய், சிம்ரன், விவேக்
நடித்த
**ப்ரியமானவளே**
(ரீலீஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்) (87067)

**ராஜா** யாழ்ப்பாணம்
கார்த்திக், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
**ரோஜாவனம்**
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
27.04.2001 முதல் அதிகதின்
*தினா*



**GOLDEN EAGLE SECURITY SERVICE**
**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை**
(பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது.)

*கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடம்*
**Security Guards - Vacancies**

*தகைமைகள்:*

1. உயரம் :- 54" / மார்பு :- 32" } குறைந்தளவு
   நல்ல திடகாத்திரமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
2. கல்வி :- க.பொ.த. சாதாரண தரம் (குறைந்தது)
3. வயதெல்லை :- 24 - 50 வரை
4. பொலீஸ் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு விசேட சலுகை கொடுக்கப்படும்.

*குறிப்பு:*
அண்மையில் பெற்ற கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரத்துடன் நாளை (25.04.2001) புதன்கிழமை பிற்பகல் 16.00 மணிக்கு நேரில் பிரசன்னமாகியிருக்கவும். யாழ்நகரின் சுற்றாடலில் 5 மைல்களுக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3ஆம் மாடி,
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/16416)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 - 06 - 1932



மறைவு 25 - 03 - 2001

## அமரர் மருதையனார் பொன்னம்பலம்

ஆனதோ முப்பத்தொன்று நீர் அகிலம் விட்டுப்பிரிந்து
மறக்க முடியவில்லையே நின் திருமுகத்தை எம்மால்!
அன்பான பேச்சும் அழகான சிரிப்பும் கண்ணில் தெரியுதே!
*ஆத்மா சாந்தி பெற அம்மையப்பனைப் பணிகின்றோம்.*

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (87054) - தமிழினி தொழிலகம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 - 03 - 1930



விண்ணில் 25 - 03 - 2001

அமரர் இசைஞானவாரிதி

## ஸ்ரீமான் V.A. இராமையா அவர்கள்

(பிரபல நாதஸ்வர வித்துவான்)

அன்பிலும், பண்பிலும், பாசத்திலும் உயர்ந்து
கலையொலித் தீபமாகி, நாதமாய் ஒலித்து நின்று
அன்போடு அறிவூட்டி இந்த வையத்தில் வாழ்ந்து
உலகில் நாமுயர நமக்கு வழிகாட்டினீரே!
இப்பூலோகம் உள்ளளவும்
எம் அப்பாவை என்றும் நாம் மறவோம்.

இன்று (24.04.2001) செவ்வாய்க்கிழமை சுவிஸில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இடம்பெறும்.

தகவல்:
இ.சக்திவேல் (சுவிஸ்)
இ.விஸ்வநாதன் (சுவிஸ்)

***8050 ZURICH,***
***SWITZERLAND.*** (87060)

# மரண அறிவித்தல்

## கே. பூரணம்பிள்ளை

(ஹாட்லிக்கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர்)

அன்னார் 22.04.2001 அன்று லண்டனில் காலமானார். அன்னாரது வாழ்க்கைக்கும், சேவைக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு முகவரி:-
Dr. Mrs P. Arulanantham,
3,St.John's Church Road,
Folkestone,
Kent CT.19 5BQ
U.K. (C/16418)

எஸ்.தனபாலன்,
*அதிபர்.*
*சென்.ஜோன்ஸ் கல்லூரி.*
*யாழ்ப்பாணம்.*

### இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில்

# ஈழ அகதிகள் முகாமை இடம்மாற்ற கோரி உள்ளூர் வாசிகள் போராட்டம்

யுவனேஷ்வர், ஏப். 24

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் உள்ள இலங்கை தமிழர் அகதி முகாமை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அப்பகுதிப் பொது மக்கள் கோரிக்கைப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் அகதிகள் அப் பகுதிப் பொது மக்களின் மீது தாக்குதல்களை நடத்தி வருவதாலேயே அகதிமுகாமை இடம்மாற்றும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

'மல்கம்கிரி' என்ற இடத்தில் உள்ள குறிப்பிட்ட அகதி முகாமில் தங்கியிருப்பவர்கள் கடந்த வியாழக்கிழமை பெரும் கும்பலாகச் சென்று, உள்ளூர் வாசிகள் சிலரைத் தாக்கியதாகவும்—

இதனைத் தொடர்ந்து அகதி முகாமை வேறு இடத்துக்கு மாற்றும்படி கோரும் போராட்டங்களை உள்ளூர் மக்கள் தீவிரப்படுத்தியுள்ளதாகவும்—

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக 31 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிராகப் பொலீஸார் குற்றச்சாட்டுப் பதிவு செய்துள்ளதுடன் அகதி முகாம் தலைவர் உட்பட 4பேரைக் கைது செய்துள்ளனர்.

ஆனாலும் உள்ளூர் மக்கள் சமாதானமடையாமல், தமது கோரிக்கையை வலுப்படுத்தியுள்ளனர். (ஒ)

## தமிழக அரசியலில்...

இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் படத்தை ம.தி.மு.கவினர் தமதுதேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதற்கு பா. ஜ. கவின் தமிழகத் தலைவர் இல. கணேசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ம. தி. மு. கவின் இந்தச் செயற்பாடு அரசியல் அநாகரிகமானது என்று இல. கணேசன் சாடியுள்ளார்.

★ ★ ★

சேது சமுத்திரத் திட்டத்தை விரைவுபடுத்தும்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ளது.

தென் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆறுகளையும் இணைக்கவும் அக்கட்சி முக்கியத்துவம் அளித்துள்ளது.

★ ★ ★

குற்றவியல் வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவர்களும், 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்களும் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற விதியை நினைவுபடுத்தி சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்க இந்திய உச்ச நீதி மன்றம் முடிவு செய்துள்ளது.

★ ★ ★

பாண்டிச்சேரி பா.ம.க. தலைவர் மஞ்சிரி உட்பட அக்கட்சியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் ராஜினாமா செய்துள்ளார்கள். பா. ம. கவுக்காகக் கடுமையாக உழைத்த தம்மை கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் வஞ்சித்து விட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

★ ★ ★

தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி நேற்று சென்னை, சேப்பாக்கம் தொகுதியில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

அவரது மகனும், சென்னை நகர மேயருமான மு. க. ஸ்டாலின் ஆயிரம் விளக்குத் தொகுதியில் வேட்பு மனுதாக்கல் செய்தார்.

தமிழகத்தில் மேயர் பதவி சம்பளமற்ற கௌரவ பதவியாக இருப்பதால் தேர்தலில் ஸ்டாலின் வெற்றிபெற்று, சட்டமன்ற உறுப்பினரானாலும், அவர் மேயர் பதவியிலிருந்து விலகத் தேவையில்லை.

# சீன நிலக்கரிச் சுரங்க விபத்தில் 47 தொழிலாளர் உயிரிழப்பு!

பீஜிங், ஏப். 24

சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் கடந்த சனியன்று இடம்பெற்ற வெடி விபத்தில் 47 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வடக்குப் புலத்தில் அமைந்துள்ள ஷாங்கி மாநிலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொழிலாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு கடந்த வருடம் அரசினால் மூடப்பட்ட சுரங்கத்தினுள் சட்டவிரோதமாக நிலக்கரி அகழும் வேலையில் ஈடுபட்டிருந்தோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் நான்கு தொழிலாளர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். ஒருவர் காணாமற் போய்விட்டார்.

தொழிலாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு சீன அரசாங்கம் அண்மைக் காலமாகப் பல சுரங்கங்களை மூடி வருகிறது. இதனால் அங்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து வருவதுடன் பலர் சட்டவிரோதமாகத் தொழிலிலீடுபடுவதற்கும் இது தூண்டுதலாக அமைந்துள்ளது. (க-7)

# கொலம்பியப் படையினரால் பிரபல போதை மன்னர் கைது!

போகோடா, ஏப். 24

பிரேஸிலின் மிகச் சக்தி வாய்ந்த போதைப் பொருள் மன்னரை கொலம்பியப்படையினர் கைது செய்துள்ளனர்.

சிறையில் இருந்து தப்பிச் சென்ற இந்த நபர் கொக்கெய்னைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக கொலம்பிய கிளர்ச்சிக்காரர்களுக்கு இடதுசாரி ஆயுதங்களைவழங்குவதாக குற்றஞ்சாட்டப்படுபவர் ஆவார்.

லூயிஸ் பெனாண்டோ டிகொஸ்டா என்ற இந்தப் போதை மன்னர் வெனிசுலா பிரேஸில் எல்லையிலுள்ள கொலம்பியாவின் கானக மாகாணமான விசாடாவில் 50 நிமிட போராட்டத்துக்குப்பின் இராணுவத்திடம் சரணடைந்தார். காயமடைந்தும் மோசமான ஆரோக்கியநிலையிலுமிருந்த டிகொஸ்டாவுடன் மற்றொரு பிரேஸில் வாசியும் கைது செய்யப்பட்டார்.

33 வயதான டிகொஸ்டா 1996 ஆம் ஆண்டு பிரேஸில் சிறையிலிருந்து தப்பி ஓடியவர் ஆவார். (ஏ)

## மேலும் 2 தொகுதிகளில் ஜெயலலிதா மனு!

சென்னை, ஏப். 24

தமிழக சட்டசபைத் தேர்தலில் மேலும் இரண்டு தொகுதிகளில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

புதுக்கோட்டை, புவனகிரி ஆகிய இரண்டு தொகுதிகளில் நேற்று ஜெயலலிதா சார்பில் அவரது பிரதி நிதிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

# வேட்பு மனுத் தாக்கல்கள் நேற்றுடன் முடிவடைந்தன

சென்னை, ஏப். 24

தமிழகம், பாண்டிச்சேரி உட்பட 5 மாநிலங்களின் சட்ட சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கல்கள் நேற்று பிற்பகல் 3 மணியுடன் முடிவுக்கு வந்தன.

திருச்சி நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலின் வேட்பு மனுத் தாக்கல்களும் நேற்றுடன் முடிவடைந்தன.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வேட்பு மனுக்களை வாபஸ் பெற நாளை மறுதினம் வியாழக்கிழமை கடைசி நாளாகும். (ஒ-4)

# வாக்குப்பதிவு இயந்திரத்துக்கு தடைகோரும் மனு தள்ளுபடி

புதுடில்லி ஏப். 24

சட்டப் பேரவைத் தேர்தலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைத் தேர்தல் ஆணையம் பயன் படுத்தத் தடைவிதிக்கக் கோரி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை இந்திய உச்ச நீதி மன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும்—

இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் வாக்குப் பதிவில் ஏற்படக் கூடிய தவறுகளை மனுதாரர் நீதிமன்றத்தில் சரிவரச் சமர்ப்பிக்கவில்லை என்றும் — தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-4)

### தமிழகத்தேர்தல் சூடுபிடிக்கிறது

# கட்சிகளின் கொடி, பதாகைகள் தயாரிக்கும் பணி மும்முரம்

சென்னை, ஏப். 24

தமிழகத்தில் தேர்தல் பரபரப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், கட்சிகளின் கொடிகள் மற்றும் பதாகைகள் தயாரிப்பவர்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஈரோட்டிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 200 குழுக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளின் கொடிகளைத் தயாரிக்கும் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன.

கொடிகள் தயாரிக்கும் பணிகளில் சுமார் 60 கோடி ரூபா அளவுக்கு பணம் புழங்குவதாகவும் —

நாடாளுமன்றத் தேர்தலை விட சட்டப் பேரவைத் தேர்தல் சமயத்தில் 20 கோடி ரூபாய்கள் குறைவாகவே வியாபாரம் நடைபெறுவதாகவும் — சிறு முதலீட்டாளர்கள் கூறியுள்ளனர். (ஒ)

### தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தில்

# அ. தி. மு. கவில் சேர்ந்த திரையுலகினர் ஏமாற்றம்

சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட தமக்கு வாய்ப்புக்கிடைக்கும் என்று நம்பி அ.தி.மு. கவில் சேர்ந்ததாகக் கூறப்படும், முன்னாள் அமைச்சர் தமிழ்க்குடிமகன், நடிகர்கள் ராதாரவி, எஸ். எஸ். சந்திரன், நடிகைகள் அம்பிகா, ராதா, சி. ஆர். சரஸ்வதி ஆகியோர் எதிர் பார்த்த வாய்ப்புக்கிடைக்காததால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

தமிழ்க் குடிமகன் உட்பட அனைவரும், முன்னர் இருந்த கட்சிகளில் இருந்து அ. தி. மு. கவுக்கு தாவியது போல் நாளை இங்கிருந்து வேறு கட்சிகளுக்கு மாறமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை என்று ஜெயலலிதா கருதிய காரணததாலேயே இவர்களுக்கு தேர்தலில் போட்டியிடவாய்ப்புத்தரபடவில்லை என்றுகூறப்படுகிறது.

இதேபோல், வாழப்பாடி. ராமமூர்த்தியின் ராஜீவ் காங்கிரஸில் இருந்து திருமயம் தொகுதி தரப்படும் என்ற உறுதியின் பேரில் அ. தி. மு. கவுக்கு வந்தவர் புதுக்கோட்டை அழகுராஜா. அ. தி. மு. கவினர் வழங்கிய உறுதி மொழியை நம்பி தனது பெயரை திருமயம் அழகுராஜா என்றும் அவர் மாற்றிக்கொண்டார். ஆனால் அவரும் இறுதியில் ஏமாற்றமடைந்துள்ளார்.

இதேசமயம், பா. ஜ. கவில் இருந்து வந்த மைத்ரேயனுக்கும், பா. ம. கவில் இருநது வந்த தலித்எழில் மலைக்கும் தேர்தலில் போட்டியிட ஜெயலலிதா வாய்ப்புக் கொடுத்துள்ளார்.

இவர்கள் இருவரும் மாற்றுக்கட்சிகளில் இருந்த சமயத்திலேயே, ஜெயலலிதாவுக்கு விசுவாசிகளாக இருந்ததாகக் கூறப்படுகிறது. (ஒ)

### இந்திய நாடாளுமன்றத்தில் 'பட்ஜெட்' நிறைவேற

# சோனியாவின் ஒத்துழைப்பை கோருகின்றார் பிரதமர் வாஜ்பாய்!

புதுடில்லி, ஏப். 24

பாரதிய ஜனதா அரசாங்கத்தின் ''பட்ஜெட்'' நாடாளுமன்றின் இரு சபைகளிலும் நிறைவேற ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து இந்தியப் பிரதமர் நேற்று முன்தினம் மாலை சோனியா காந்திக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத்தின் கௌரவத்தைக் கவனத்தில்கொண்டு சோனியா காந்தி இந்த விடயத்தில் கூடிய அக்கறை காட்டவேண்டும்.

பாரதிய ஜனதா அரசாங்கத்துடன் கருத்து முரண்பாடுகள் இருந்தால் பட்ஜெட் நிறைவேறியதும் அது குறித்துப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் — என்று அதில் உள்ளது.

ஆயுத பேர ஊழலில்ஆளும் கூட்டணியைச் சேர்ந்தவர்கள்சம்பந்தப்பட்டிருப்பதைத் 'தெகல்கார்' செய்தி நிறுவனம் சில வாரங்களுக்கு முன்னர் அம்பலப்படுத்தியிருந்தது.

அப்போதிலிருந்து, மத்திய அரசைப் பதவி விலகக்கோரி, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செயற்படமுடியாதவாறு குழப்பம் விளைவித்து வருகின்றனர்.

இதனால் 'பட்ஜெட்'நிறைவேற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 'பட்ஜெட் நிறைவேற்றப்படாவிட்டால், நாடு மிகப் பாரிய பொருளாதார நடைமுறைச் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும் என்று அஞ்சப்படுகிறது. (க-7)

# பேச்சுக்குமுன் நிறைவேற்றவேண்டிய 5 விடயங்கள்பற்றி புலிகள் தெரிவிப்பு

## சொல்ஹெய்முக்கு பாலசிங்கம் விளக்கம்

கொழும்பு, ஏப். 24

இலங்கை அரசுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய ஐந்து முக்கிய விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகள் நோர்வேயின் விசேட பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சந்தித்து சுமார் மூன்று மணிநேரப் பேச்சு நடத்தினார். இதன்போதே இந்த ஐந்து விடயங்கள் குறித்தும் அன்ரன் பாலசிங்கம் சொல்ஹெய்மிடம் தெரிவித்துள்ளார்.

முதலாவதாக, சமாதானப் பேச்சுக்களுக்காக நோர்வே முன்வைத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் (Memorandom of Under standing) பெயரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றிய உடன்பாடு (Agreement of Humani tarian Measures) என மாற்றியுள்ளதற்கு புலிகள் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், நோர்வே முன்வைத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் மறுப்புகளோ அதன் முக்கிய அம்சங்களைக் குறைத்தோ அல்லது மாற்றங்கள் செய்தோ இருந்தால் அதனைப் புலிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இரண்டாவதாகப், புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசு நிறைவேற்றவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதில் குறிப்பிட்டவாறு எந்தவிதக் கட்டுப்பாடுமில்லாது அத்தியாவசியப் பொருள்களை அரசு புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அனுமதிக்க வேண்டும்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் குறிப்பிட்டவாறு இந்தப் பொருள்களை புலிகளின் பகுதிகளுக்கு எதுவிதக் கட்டுப்பாடுகளோ தடைகளோ இன்றி முழு அளவில் எடுத்துச் செல்லலாம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் (சர்வதேசக் கண்காணிப்புக் குழு) மேற்கொள்ளப்பட வேண்டும்.

மூன்றாவதாக, யுத்த சூழ் நிலையில் அர்த்தமுள்ள பேச்சுக்களை நடத்துவது சாத்தியமில்லை என்பதால் பேச்சுக்களுக்கு முன்னர் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தம் அமுல் படுத்தப்படாத நிலையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி குறித்து ஆராயப்பட்டு வருவதாக அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அத்துடன் கடந்த டிசெம்பர் மாதம் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை புலிகள் தொடர்ந்தும் நான்கு மாதங்களாகக் கடைப்பிடித்து வருவதால் அதற்குச் சாதகமாக அரசும் போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும்.

நான்காவதாக, தங்களின் அமைப்பு தடை செய்யப்பட்ட நிலையில் புலிகள் பேச்சுக்களுக்கு முன்வரமாட்டார்கள். இது பற்றி கடந்த வருடமே எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பேச்சுக்களுக்கு முன்னர் புலிகள் மீதான தடையை அரசு நீக்கவேண்டுமெனவும் சொல்ஹெய்மிடம் ஞாபகப் படுத்தபட்டுள்ளது.

ஆரம்பத்திலிருந்தே புலிகள் இதனை வலியுறுத்தி வருவதாலும் இது குறித்து புலிகள் பத்திரிகை அறிக்கைகளிலும் பேட்டிகளிலும் சுட்டிக்காட்டி வருவதாலும் இது புதியதொரு கோரிக்கையல்லஎனவும் சுட்டிக் காட்டப் பட்டது.

ஐந்தாவதாக, அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுக்களை ஆரம்பித்து வைப்பதுடன் நோர்வேயின் அனுசரணை முயற்சி முடிவடைந்து விடுமென வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் அறிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டி, பல்வேறு அரசாங்கங்களின் துரோகத்தனங்கள் குறித்து தமிழ்மக்கள் ஏற்கனவே நல்ல அனுபவங்களைப் பெற்றுள்ளதால் மூன்றாந்தரப்பின்றி சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தப் பேச்சுக்கள் நோர்வேயின் மத்தியஸ்தத்துடனேயே நடைபெறவுள்ளன என்பதாலேயே தமிழ்மக்கள் ஒட்டு மொத்தமாக இந்தப் பேச்சுக்களுக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

இதனாலேயே பேச்சு ஆரம்பமான பின்னரும் இந்த சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பு தொடர்ந்தும் இருக்க வேண்டுமென புலிகள் விரும்புவதுடன் பேச்சுக்களில் நல்லதொரு முடிவு எட்டப்படும்வரை நோர்வே 'வழிகாட்டலையும் ஆலோசனை வழங்கலையும்' மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஐந்து விடயங்களையும் சுட்டிக்காட்டிய அன்ரன் பாலசிங்கம் சமாதான முயற்சிவெற்றிபெறுவதற்காக இவை ஒரு வேண்டுகோளே தவிர நிபந்தனையல்ல எனவும் சொல்ஹெய்மிடம் கூறியுள்ளார்.

தான் கூறிய இந்த விடயங்களை முழுமையாக இலங்கை அரசிடம் தெரிவிக்குமாறு பாலசிங்கம் கூறினார். இவற்றையெல்லாம் தனது அடுத்த கொழும்பு விஜயத்தின்போது அரச தரப்பிடம் தெரிவிப்பதாகசொல்ஹெய்ம் அங்கு உறுதியளித்தார். (ம)


## கண்ணீர் அஞ்சலி

யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் இணைந்த கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியை

செல்வி அ. சுபாங்கினி

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அருமைநாயகம் சிவபூஷணம்

(ஓய்வு பெற்ற அதிபர், யா/ சக்தி அம்மன் வித்தியாலயம்)

இறைவனடி எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா| கரணவாய்
பொன்னம்பல வித்தியாலயம்,
கிளி| கிளாலி றோ. க. த. க. பாடசாலை.

(சி/16418)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(மைனர்)

தோற்றம் 16-08-1924 மறைவு 05-05-2000

திதி: 24-04-2001

எம்மையெல்லாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(87051)


# இ. தொ. காவில் செல்லச்சாமி?

கொழும்பு, ஏப். 24

ஐ தே கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ் செல்லச்சாமி மீண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைய உள்ளார். இ. தொ. காவின் தவிசாளராக இவர் பணியாற்றுவாரென இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கனடா சென்றிருக்கும் எம். எஸ். செல்லச்சாமி எம். பி. எதிர்வரும் 6 ஆம் திகதி நாடு திரும்புவார்.

இதேவேளை மொறிசியஸ் சென்றிருக்கும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மே தினத்தன்று அதிகாலை நாடு திரும்பவுள்ளார்: செல்லச்சாமி நாடு திரும்பியதும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்து விட்டு பதவியைப் பொறுப்பேற்பாரென்றும் இ. தொ. கா. வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ம)

# தொடரும் மழை காரணமாக புகையிலைச் செய்கை பாதிப்பு

அச்சுவேலி, ஏப். 24

மழையினால் புகையிலைச் செய்கை பாதிப்படைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தற்பொழுது தொடர்ந்து பெய்து வரும் மழையினால் விளைந்து அறுவடைக்குத் தயாரான நிலையில் இருக்கும் புகையிலைச் செடிகள் பெருமளவில் பாதிப்படைந்திருப்பதோடு அறுவடை செய்த புகையிலைகளையும் பாகம் செய்ய முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் பார்க்க புகையிலையின் விலை கணிசமான அளவு அதிகரித்துள்ள நிலையில் விளைந்து அறுவடைக்குத் தயாராகி இருக்கும் போது மழையால் பாதிக்கப்பட்டிருப்பது விவசாயிகளை பெரும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

(க-11)

# ஐ. தே. கட்சி எம். பி. வீட்டில் திடீர் சோதனை

மாத்தளை, அலுவிகாரைப் பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகாரையின் வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பொலீஸார் திடீர் சோதனை நடத்தினர்.

பொலீஸார் அண்மையில் இரந்தோட்டையிலுள்ள நிக்கலோடா கிராமத்தில் இராணுவத்திலிருந்து தப்பி வந்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரை விசாரணைக் குட்படுத்தியபோது தன்னிடமிருந்த துப்பாக்கி ஒன்றை ரஞ்சித் அலுவிகார எம். பி. விலை கொடுத்து வாங்கியதாகத் தெரிவித்தார். இதனை அடுத்தே பொலீஸார் எம்.பியின் வீட்டைச் சோதனைக்குட்படுத்தியுள்ளனர். எனினும் அவ்வாறான துப்பாக்கி எதுவும் கைப்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# கிராம அபிவிருத்திச் சங்க சமாசம் அங்குரார்ப்பணம்

சண்டிலிப்பாய், ஏப். 24

வலி. தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அண்மையில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் விடுத்த சுற்று அறிக்கையின்படி இந்தச் சமாசம் அமைக்கப்பட்டுள்ளது.

(ம-135)

# அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்விப்பணிமனையில் இடம் பெறவிருக்கின்றது.

(ஐ-3)

# காணாமற்போன மேலும் 22 பேர் தொடர்பான விசாரணைகள்

## உறவினர், தகவல் அறிந்தவர்க்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

காணாமற் போனோர் தொடர்பாக இந்த வாரம் விசாரணை செய்வதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் 22 பேரின் பெயர், விவரங்களை அறிவித்துள்ளனர்.

காணாமற் போனதாகக் கூறப்படும் இந்த 22 பேரினதும் உறவினர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்களை நேரடியாகப் பொலீஸ் நிலையங்களுக்குச் சமுகமளித்து சாட்சியம் வழங்கி உதவுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டோர் பொலீஸ் நிலையம் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

துரைராசா பாலச்சந்திரன் — மலைமகள் வீதி, அரியாலை, குணபாலசிங்கம் பாலேந்திரன் — புங்கன்குளம் வீதி, அரியாலை, நவரட்ணராஜா தேவபாலன் — கண்டி வீதி, அரியாலை, தெய்வேந்திரன் பிரபாகரன் — கோப்பாய் மத்தி, செல்வரட்ணம் செல்வராஜா — பழைய பொலீஸ் நிலையம், கோப்பாய் தெற்கு. செல்லப்பா கோகுலராஜ் — மட்டுவில் தெற்கு, நவரட்ணம் கதிர்காமவேல் — நாவலர் வீதி, யாழ்ப்பாணம். செல்லத்துரை செல்வகுமார் — பெத்தகோஸ்தே லேன், கச்சேரியடி, யாழ். டேவிட் டொனால்ட் — கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு. சற்குணம் நிர்மலன் — ஆசிர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு. எஸ். தவச்செல்வம் வளர்புரம், கைதடி மேற்கு. காந்தி செந்தீபன் — நாவற்குழி தெற்கு, கைதடி.

### பருத்தித்துறை

கணபதிப்பிள்ளை கண்ணதாஸன் — சோரன்பற்று, பளை. கணபதிப்பிள்ளை வேதநாயகம்— இணுவில் கிழக்கு, மாணிக்கம் தெய்வானை — புத்தூர் கிழக்கு. ரட்ணம் இராசரட்ணம்— சோரன் பற்று, பளை. சிவஞானம் மனோகரன் — எல்லாய் லேன், தும்பளை.

### சுன்னாகம்

தவராஜா சதிஸ்குமார் — சாவற்காடு, சுதுமலை தெற்கு. கணபதி கிருஷ்ணன் — மின்சார நிலைய வீதி, சுன்னாகம். குலசிங்கம் விஜயகுமார் — கரம்பன் குறிச்சி மேற்கு, வேலணை. மாணிக்கம் டெனிகாந்தன் — கே.கே. எஸ். வீதி, மல்லாகம். மூத்தையா சிவகுமார்— செல்வா லேன், தொல்புரம்.

(க-9)

உதயன்

## மூல வேர்களைப் படாது காப்போம்

போரினால், போர்ச் சூழ்நிலையினால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் சரிந்துபோய்க் கிடப்பது பழைய சங்கதி. போர் தொடங்குவதற்கு முனனர் இருந்த பொருளியல் நிலையை எய்துவதற்கு இன்னும் பல தசாப்தங்கள் செல்லும் என்று கட்டியம் கூறுவதுபோல அது மேலும் தேய்ந்து கொண்டு வருகிறது.

குடாநாட்டின் பொருளாதாரத்தை சராசரி நிலையிலேனும் வைத்திருந்த சுதேச வளங்கள் - உற்பத்தித் துறைகள் - மிகவும் நலிவடைந்து போயுள்ளன. அத்தகைய மூன்று பிரதான துறைகளில் பனைத் தொழிலும் ஒன்று.

பல வகைகளாலும் பயன்பட்ட பனைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டன; அவை அழிக்கப்பட்டு விட்டன. மீள் நடுகைமூலம் முந்திய உச்சப்பயனைப்பெற இன்னும் வருடங்கள் பல செல்லும்.

அது ஒருபுறம் இருக்க, எஞ்சியிருக்கும் பனைகளில் இருந்து கிடைக்கக்கூடிய பயுன்கள்தானும் நிறைவாகப் பெறப்படவில்லை. அதற்கு ஓர் உதாரணம் பருவகாலத்தில் கிடைக்கும் கள்ளை சேமித்து வைக்க உரிய - போதிய - வசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் நாளாந்தம் பெருமளவு கள் நிலத்தில் வீணே ஊற்றப்படுகிறது; அதனால் பல லட்சம் ரூபா நட்டம் ஏற்படுகிறது; குடாநாட்டில் உள்ள சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன் விளைவு ஏற்கனவே நலிவடைந்துள்ள குடாநாட்டின் பொருளாதாரம் மேலும் மெலிவடைகிறது. குடாநாட்டில் இயங்கிய 3 வடிசாலைகளில் ஒன்று - கைதடியில் செயற்பட்டது - இப்போது இல்லை. அதுவும் உற்பத்தி நலிவுக்கு ஒரு காரணம எனத் தெரிவிக்கப்படுகிறது.

பனை இந்த மண்ணின் - குடாநாட்டின் - சொந்தப் பயிர். சுமார் மூன்று நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் இப்பிரதேச மக்களின் வாழ்விலும் வளத்திலும் அது பெரும் பங்காற்றியது. அவர்களுக்கு சத்தான உணவு வகைகளை வழங்கியது. பொருள் வளத்தை - பொருளாதாரத்தை - பெருக்கியது.

எத்தனை சந்ததிக்கும் பொருள் வளம் சேர்க்கவல்ல பனைவளம், நிரந்தரமானது. அதனைப் பேணுவதும், பெருக்குவதும் இப்பிரதேச மக்களினது முயற்சியிலும் உழைப்பிலும் தங்கியுள்ளது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியையும், விஞ்ஞான முன்னேற்றத்தையும் பிரயோகித்து பனைவளத்தையும் பனைத்தொழிலையும் பெருக்க வேண்டிய கடமை மக்களின் நலன்களில் அக்கறை உடையவர்களாக உரிமை கொண்டாடுபவர்களின் தட்டிக்கழிக்கமுடியாத பொறுப்பு.

புதிய உற்பத்தித் துறைகளை, தொழில் வசதிகளை அறிமுகப்படுத்தவும் அவற்றினூடு பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அக்கறை செலுத்தப்படுவது வரவேற்கத் தக்கது. மூளை வளத்தின்மூலம் குடாநாட்டின் பொருளாதாரத்தைச் சிறப்பிக்கலாம் என்ற புதிய சிந்தனை கருத்திற்கொள்ளப்பட வேண்டியதே.

ஆனால் அதற்கு முன்னர் பனை வளம் போன்ற எமது பாரம்பரிய, நிரந்தர பொருளாதார அலகுகள் அழிந்து விடாது தடுப்பது - காப்பது - பாரிய பொறுப்பாகும். எமது சொந்தச் சொத்தைப் பேணுவதில் முதலில் அக்கறை காட்ட வேண்டும். அது வெறும் சொல்லாகவும், எழுத்தாகவும் இல்லாமல் செயலாக வெளிப்படவேண்டும்.

எங்கள் பொருளாதாரத்தின் மூல வேர்களை பட்டொழிய விட்டு விட்டு, புதிய வளங்களைக் கொண்டு வந்து முதன்மைப்படுத்த நினைப்பது - முயல்வது - அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதையாகி விடக்கூடும். எனவே இரண்டின் மீதும் சம கவனம் செலுத்திக் குடாநாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த உழைப்போமாக!

# 5 கல்வி வலயங்களுக்கும் இறுதிக் கட்ட நூல் விநியோகம்

## இன்றும் நாளையும் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்களின் இறுதியும், மூன்றாம் தொகுதியுமான இந்த ஆண்டுக்கான நூல்கள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் ஐந்து கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள இந்த நூல்கள் இன்று காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்கும் -

நாளைய தினம் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகக் கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இந்த ஆண்டு இரு தடவைகள் பாடநூல்கள் வழங்கப்பட்ட போதும் 5 கல்வி வலயங்களின தேவைகளுக்கு ஏற்றவாறு வழங்கப்படவில்லை என்று பல தரப்பினராலும் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதலாவது தொகுதி பாடநூல்கள் பொதிகளில் இடப்பட்டிருந்த குறியீட்டின் அடிப்படையில் 5 வலயங்களுக்கும் பொதிகளாகவே வழங்கப்பட்டன. இதனால் யாழ்.கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய வலயங்களுக்குப் பெரும்பாலான பாடநூல்கள் கிடைக்கவில்லை. இதனைக் கருத்திற் கொண்டு இரண்டாவது தொகுதி பாடநூல்கள் வழங்கப்பட்ட போது அனைத்துப் பொதிகளும் பிரிக்கப்பட்டு 5 வலயங்களின் தேவையின் அடிப்படையில் வீதத்திற்கேற்ப தமக்கு வழங்குமாறு 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுக் கொண்டனர்.

இதனால் இரண்டாவது தொகுதி நூல்கள் அவ்வாறு வழங்கப்பட்டன. தற்பொழுது வழங்கப்படவுள்ள மூன்றாவது தொகுதி பாடநூல்கள் இங்கு வந்து சேர்வதற்கு முன்பே வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், பொதிகளில் இடப்பட்டுள்ள குறியீடுகளின் படியே பாட நூல்கள் வழங்கப்பட வேண்டும் என்று தொலைபேசி மூலம் பணித்திருந்தார்.

இதன்படி இன்றும் நாளையும் பொதிகளாகவே ஐந்து வலயங்களுக்கும் பாடநூல்கள் வழங்கப்படும் என்று மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(க-10)

## கைதிகளைப் பார்வையிட அதிகாரி காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (க-10)

## யாழ்.வலய அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.கல்வி வலயப் பணிமனையில் நடைபெறும்.

அதிபர்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (ம)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவியருக்கு!

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்புகள் (2003) நாளை புதன்கிழமை ஆரம்பமாக உள்ளன என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (க)

## சுகாதாரச் சீர்கேடு நிலவிய பேக்கரியைத் திருத்தப் பணிப்பு

சண்டிலிப்பாய்,ஏப்.24

சுன்னாகம் சூறாவத்தை பகுதியிலுள்ள பேக்கரி ஒன்றில் நிலவிய சுகாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு அங்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த பேக்கரியில் சுகாதார விதிகளுக்கு முரணானவிதத்தில் செயற்பாடுகள் இருந்து வருவதாக சுன்னாகம் பொது சுகாதாரப் பரிசோதகர் உணவு சட்டத்தின் கீழ் மல்லாகம் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த நீதிவான் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டவுடன் அதுபற்றிய விவரத்தை நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-135)

## விபத்தில் சிறுவன் பலியான சம்பவம்: லொறிச் சாரதிக்குப் பிணை

நெல்லியடி,ஏப்.24

பருத்தித்துறை - மெத்தைக் கடைச் சந்தியில் இடம்பெற்ற லொறி - ஸ்கூட்டர் விபத்தில் சிறுவன் பலியானது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த -

லொறிச்சாரதி 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்ல, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.கே. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுவன் பலியாகி இருந்தான்.

இச்சம்பவம் தொடர்பாக லொறிச் சாரதியான யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த எம்.இராமலிங்கம் (வயது 61) என்பவரே, பருத்தித்துறைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

(ய-109)



வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் இப்பகுதி முன்பள்ளி மாணவர்களின் உபயோகத்துக்கென ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான மேசை-கதிரைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் கண்ணன், முன்பள்ளி ஆசிரியை திருமதி மகேந்திரன் ஆகியோர் வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன், செயலாளர் க.சிதம்பரநாதன் ஆகியோரிடம் இருந்து கதிரைகளைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்

(க-152)

## படையினரிடம் 'பாடம் படித்த' இளைஞர்கள்!

தென்மராட்சி,ஏப்.24

வீதியில் சென்ற இளம்பெண்ணைப் பின்தொடர்ந்து சேஷ்டை புரிந்த மூன்று இளைஞர்களின் அடையாள அட்டைகள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை புலோலி உபய கதிர்காமம் பகுதியில் இடம் பெற்றது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களின் அடையாள அட்டைகளே பறிமுதல் செய்யப்பட்டவையாகும்.

(ம-117)

### உதயவாக்கு

கர்வம் அதுதான் முட்டாள்களை விட்டு ஒருபோதும் நீங்காத துர்க்குணம்.


### நாளை

சித்திரை 12
புதன்கிழமை
திதி: துதியை
முன்னிரவு : 8.39 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பின்னிரவு : 4.23 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 4.30 - 6.00
ராகுகாலம் : 12.00 - 1.30
(பழைய நேரப்படி)

## அச்சுவேலி நகரிலுள்ள மக்கள் வங்கி தனித்துவமாகச் செயற்படும் காலம் வருமா?

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் (கோப்பாய்த் தொகுதி) மிக முக்கியமான மத்திய ஸ்தானத்தில் அமைந்துள்ள கிராமம் அச்சுவேலி. வளங் கொழிக்கும் விளை நிலங்களையும் நெருக்கமான வதிவிடங்களையும் கொண்ட இந்தக் கிராமத்திலிருந்து வடமராட்சி, யாழ்ப்பாணம், தென்மராட்சி, வலிகாமம் என நான்கு திசைகளுக்கும் செல்வதற்கான பிரதான வீதிகள் பிரிந்து செல்கின்றன.

கோப்பாய்த் தொகுதியில் வர்த்தக வங்கிக்கிளைகள் எதுவும் இல்லை என்ற பெருங்குறை அச்சுவேலியில் மக்கள் வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அகற்றப்




பட்டுள்ளது.

அச்சுவேலி பஸ் நிலையத்திற்குக் கிழக்குப் புறத்தில் பொதுச்சந்தையின் மேற்றளத்தில் மக்கள் வங்கியின் செயற்பாடுகள் யாழ்.ஸ்ரான்லி றோடு கிளையின் நடமாடும் கருமபீடம் என்ற நாமத்துடன் கடந்த வருடம்18-09-2000 தொடக்கம் செயற்படத் தொடங்கின.

கடந்த காலங்களில் நெல்லியடி, சுன்னாகம், யாழ்ப்பாணம் போன்ற நகரங்களுக்குச் சென்று தமது வங்கிக கருமங்களை நிறைவு செய்து வந்த மக்களுக்கு மக்கள் வங்கியின் செயற்பாடுகள் மிக வசதியாக இருந்தன. பல்வேறுவிதமான வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பாக இருந்தன. இந்த வகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்டு ஆர்வத்துடன் செயற்படுத்தப்படுகின்றன.

அச்சுவேலி மக்கள் வங்கியின் செயற்பாடுகள் இடைக்காடு, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, கோப்பாய், வயாவிளான், அச்செழு, வாதரவத்தை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பெரு நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு வசதியாக அமைந்துள்ளது.

### ஓய்வூதியம் பெறும் வசதியின்மை

அச்சுவேலியின் மக்கள் வங்கிச் செயற்பாடுகள் மேலும் ஆரோக்கியமாக மிளிர்வதற்கு பொது மக்களுக்கு கூடிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். ஓய்வூதியம் பெறுவதற்கான வசதிகள் இதுவரை செய்யப்படவில்லை. ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியக் கணக்குகளைப் பிரதேச செயலர் மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளை என்ற அந்தஸ்து கிடைக்காத நிலை காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அச்சுவேலி மக்கள் வங்கிக் கருமபீடத்தில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காசோலைப் புத்தகங்கள் யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் பெயரை உள்ளடக்கியிருப்பதால் காசோலைகளைப் பயன்படுத்தும் போது பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

### புதுப்பொலிவுடன் மக்கள் வங்கி

அச்சுவேலி மக்கள் வங்கி பல லட்சம் ரூபா செலவில் புதுப்பொலிவுடன் மெருகூட்டப்பெற்று வருகிறது. கொழும்புநகரக் கிளைகள் போன்று நவீன மயப்படுத்தப்பட்டு கவர்ச்சியாகத் திகழ்கின்ற போதிலும் வங்கியின் உள்ளே நிற்கும் வாடிக்கையாளர்களுக்கு யாழ்ப்பாணத்தை நினைவூட்டுவதாக இருப்பது குளிரூட்டி வசதியில்லாத நிலை எனக் கூறலாம்.

அச்சுவேலி மக்கள் வங்கிக் கருமபீட முகப்பில் "அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளை" என மிகப் பெரியளவில் வங்கி இலட்சினையுடன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெயருக்கேற்ற முறையில் அச்சுவேலி மக்கள் வங்கி என தனித்துவமாகச் செயற்படும் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. என்றாலும் தனித்துவமாகச் செயற்படும் நாளை வங்கி வாடிக்கையாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

ஞான ஆதவன்

# ச.தொ.ச. பணியாளர்கள் 28 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் (ச.தொ.ச) ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 28 ஊழியர்களுக்கு யாழ்.அரசாங்க அதிபர் ஊடாக கொழும்பிலுள்ள ச.தோ.சவின் தலைமையகத்தினால் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நிரந்தர நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்ட ஊழியர்களின் விவரம் வருமாறு:-

ஏ.இராஜரட்ணம் - (நல்லூர் வடக்கு), வி.ஏ.எச். செல்வப்பிரகாச நாயகம் - (இணுவில் மேற்கு), பி.யேசுதாசன் - (2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்), டி.யோனாஸ் - (டேவிட் றோட், யாழ்ப்பாணம்), எஸ்.ஸ்ரீகுகன் - (அச்சுவேலி தெற்கு), செல்வி சசிகலா தம்பித்துரை - (விளையாட்டுத் திடல் வீதி, கோப்பாய் தெற்கு), ஏ.அலோசியஸ் - (நவாலி தெற்கு, மானிப்பாய்), எஸ்.எல்.உதயராஜா - (கோவில் வீதி, மல்லாகம்), கி.ரவீந்திரன் - (அரசடி வீதி, நல்லூர்), எம்.சதானந்தன் - (புத்தூர் கிழக்கு), செல்வி எல்.எம். மெற்றலின் - (பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி சி.சித்திரா - (பத்தமேனி, அச்சுவேலி), பி.பத்மதாஸ் - (3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை), எஸ்.பத்முகன் - (புலோலி தெற்கு, சந்தையடி, புலோலி), திருமதி என்.குலசிறி - (கொம்மான்துறை வல்வெட்டித்துறை), திருமதி எஸ். இரஞ்சிதவதனி - (பி.கே. ஒழுங்கை பருத்தித்துறை), செல்வி ரி.தேவசிகாமணி - (கல்லூரி வீதி, பருத்தித்துறை), செல்வி வி.விஜயரட்ணம் - (பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்), செல்வி ஆர்.வரதீஸ்வரி - (முத்தமிழ் வீதி, யாழ்ப்பாணம்), செல்வி வி.கனகதுர்க்கா - (புகையிரத வீதி, தெல்லிப்பழை), திருமதி எஸ்.ஜேயசங்கர் - (பலாலி றோட், கந்தர்மடம்), எஸ்.வர்ணகுலராஜா - (வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை), பி.மரியநாயகம் - முத்தமிழ் வீதி, கொட்டடி), எஸ்.தனபாலன் - (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எம்.சாந்தினிகேசன் - (கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை), எஸ்.சற்குணதாஸ் - (4ஆம் சந்தி, யாழ்ப்பாணம்), எம்.பேரின்பநாதன் - (நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு), பி.சகாயராஜா - (புனித மரியாள் வீதி, பண்டத்தரிப்பு). (ஐ-5)

## வடமராட்சி கூட்டுறவுப் பணியாளர்கள்

# நெல்லியடியில் மேதினத்தை கொண்டாடுவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி ஏப்.24

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நலன் புரிச் சங்கத்தினர் இவ்வருடம் மேதினத்தை நெல்லியடியில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது வடமராட்சியில் இயங்கும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களையும் ஒன்றிணைத்து மேதினப் பேரணி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேதினப் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஆகியவை கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வாளிகளில் கசிப்பு எடுத்துச் சென்றோர் சிக்கினர்

தண்ணீர் எடுக்கும் வாளிகளுக்குள கசிப்பு கொண்டு சென்ற நால்வர் கிராம அலுவலரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். நான்கு வாளி கசிப்பும் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது. அண்மையில் துன்னாலை வடக்குப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்பகுதியில் பல இடங்களில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாகவும தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## காணாமற்போன மாணவி வீடு திரும்பினார்

தென்மராட்சி,ஏப்.24

புதுவருட தினத்தன்று காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட 14 வயது மாணவி கடந்த புதன்கிழமை வீடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த சிவானந்தம் ஸ்ரீகலா (வயது 14) என்னும் மாணவியே வீடு திரும்பியுள்ளவராவார்.

வலிகாமம் பகுதியில் உள்ள தனது சிநேகிதியின் வீட்டில் புத்தாண்டு கொண்டாடுவதற்காகச் சென்று நான்கு நாள்கள் அங்கு தங்கியிருந்ததாக அந்த மாணவி தெரிவித்துள்ளார். (ஐ-117)

## முதல் காலாண்டு மருந்து விநியோகம

சண்டிலிப்பாய்,ஏப்.24

யாழ்.சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு கடந்த வியாழனன்று மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, இளவாலை அரசினர் மத்திய மருந்தகம், தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கு இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை நேரடியாக திணைக்கள வாகனம் மூலம் கொண்டு சென்று வழங்கியுள்ளது. (ஐ-135)

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு

தென்மராட்சி,ஏப்.24

பருத்தித்துறை திக்கம் வடிசாலையில் கடமையாற்றும் 44 ஊழியர்களுக்கு கடந்த 1995 ஆண்டுக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக வடிசாலைப் பொது முகாமையாளர் ப.ரவீந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நடத்தப்பட்ட திக்கம் வடிசாலை அண்மையில் பனை அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-117)

## வீதித்தடையால் மக்கள் சிரமம்

தென்மராட்சி,ஏப்.24

வரணிச் சந்தியிலிருந்து வேம்பிராய்ச் சந்திக்குச் செல்லும் வீதி தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மந்துவில், தாவளை இயற்றாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள தமது சொந்த இருப்பிடங்களைப் பார்வையிடுவதற்கு பல மைல்கள் பயணம்செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வரணிச் சந்தியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள மந்துவில், தாவளை இயற்றாலைப் பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்வையிட கொடிகாமம் கோயிலாமனை ஊடாக சுமார எட்டு மைல்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-117)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர், யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை



### திரு.இராசையா இராசசேகரம்

[B.A(Cey.),Dip.in.Ed.,Sp.Sc.Trd. S.L.P.S 2-I]

பாடசாலைக் கல்வி முன்னேற்றதிற்காக அரும்பணியாற்றி வரும் எங்கள் அதிபர்

இலங்கை அதிபர் சேவை தரம் 2-I ற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு மேலும் அவர் பணிகள் சிறப்புறவும், பல வளங்களும் பெற்று பல்லாண்டு வாழவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
நலன் விரும்பிகளும்
யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை.

(86992)

---

## 45ஆம் நாள் நினைவலைகள்

மண் மகிழ 1966



கண் நெகிழ 2001

### அமரர் கதிர்காமு உமாமகேசன்

[கல்வயல், சாவகச்சேரி (சுவிஸ்)]

வளந்தேடிச் சென்ற இடம் உனக்கு
வஞ்சனை தான் செய்ததோ---?
இளம்பயிரே உன் வாழ்வை
வியத்து அது குடித்ததோ---?
வரவை எண்ணி நாங்கள் இங்கு
வழிபார்த்து நின்றிட
உரமிழந்து நீ எங்கே
ஓடி விட்டாய்? - உருகினோம்!
காலன் விளையாடிக் காலம் முடிந்தாலும்
கண்ணே! நீ எங்கள் மனத்தில் வாழ்வாய்!
சீலன் பெருங்குள விநாயகன் பாதமதில்
சிரந்தாழ்ந் துனக்காய் அஞ்சலித்தோம்!

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (86561)

இ.கிருஸ்ணசாமி குடும்பம்
(மைத்துனர்)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.மாணிக்கம் சாம்பசிவம** - அதிபா SLPS -I
(யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
சாவகச்சேரி)

நியமனம்: 1964.07.15 ஆங்கில ஆசிரியர்

தொழிற் தகைமை:
தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர் முதலாந்தரம்

கல்வித் தகைமை:வர்த்தக சான்றிதழ் பரீட்சை - 1962
(Institute of Commerce, London.)

| சேவை | காலம் |
|---|---|
| ஆசிரியர் சேவை | 1964.07.15 - 1985.03.26 |
| பதில் அதிபர் சேவை | 1985.03.27 - 1989.05.31 |
| இல.அதிபர்சேவை தரம் - I | 1989.06.01 - 2001.04.24 |
| அதிபர் சேவையிலிருந்து ஓய்வு | 24.04.2001 |


*அதிபர் அவர்களின் 36 வருட, 09 மாத தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதுடன், அவர் எல்லா நலன்களும் பெற்று, சீரோடும், சிறப்போடும் நீடுழி வாழ்கவென மனமார வாழ்த்துகிறோம்.*

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர், மாணவர்கள்.
*யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், சாவகச்சேரி.*

(86986)

---

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



11.03.2001 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த
எமது குடும்ப விளக்கு

### அமரர் பஞ்சலிங்கம் வஞ்சிதன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (24.04.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஞானவயிரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

மனைவி: வ.நளினி,
மகள்: வ.சியாமா,
சி.பஞ்சலிங்கம் குடும்பம்.

(86983)

---

ஓம் விராட் விஸ்வகர்ம பிரம்மனே நம:

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

தாயின் மடியில்
11 - 02 - 1960



அம்பாள் அடியில்
25 - 03 - 2001

திருமதி

### சாந்தகுமாரி குலசேகரம் (சாந்தா)

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24-04-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
*இராணி மில் ஒழுங்கை,*
*நெல்லியடி, கரவெட்டி.*

இ.குலசேகரம் குடும்பத்தினர்
*மீனாட்சி அம்மன் கோயிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

(86865)

புலிகளின் போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் போதே

# தென்மராட்சி சென்று பொருள்களை மீட்டுவர அனுமதி பெற்றுத் தாருங்கள்

## வர்த்தகர்கள் பிரதேச செயலருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஏப்.24

விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டிருக்கும் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் இக் காலத்தில் நுணாவில், மட்டுவில், சரசாலை, கைதடி ஆகிய பிரதேசங்களில் இருந்து எமது பொருள்களை எடுத்துவர அனுமதி பெற்றுத்தாருங்கள்.

- இவ்வாறு கோரும் மகஜர் நுணாவில், மட்டுவில், சரசாலைப் பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களால் தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நுணாவில், மட்டுவில், சரசாலை, கைதடி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த நாம் தற்போது வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பிரதேசங்களில் தங்கியிருக்கின்றோம்.

யுத்த நடவடிக்கைகளின் போது திடீரென இடம்பெயர்ந்த வர்த்தகர்களாகிய நாமும், பொதுமக்களும் எமது உடைமைகள் எதனையும் எடுத்துவரவில்லை.

இவ்வாறு கைவிட்டு விட்டு வந்த பொருள்களை மீட்டுவர அனுமதி கோரி கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதிக்கும், கொடிகாமம் பிரிகேட் கட்டளை அதிகாரிக்கும் பிரதேச செயலராகிய தங்களுக்கும் மகஜர் அனுப்பியிருந்தோம் அந்த மகஜருக்குக்கூட இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

யுத்தப்பிரதேசம் என்று கூறியே இதுவரை இந்தப் பகுதிக்கு சென்று வருவதற்குரிய அனுமதி எமக்கு மறுக்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கும் யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி போர் ஓய்ந்திருக்கும் எமது பிரதேசங்களுக்குச் சென்று எமது உடைமைகளை மீட்டுவர அனுமதி பெற்றுத் தாருங்கள்.

- இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)



யாழ்.மாவட்ட பாடசாலைகளின் துடுப்பந்தாட்டச் சங்கம் 'கொமர்ஷல்' வங்கியின் அனுசரணையுடன் 15 வயதுக்குட்பட்ட மாணவர் அணிகளுக்கிடையில் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தியது.

இப்போட்டியில் முதல் இடம்பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியின் கப்டன் விமலதாசன் ரஜீவன் முன்னாள் கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ்.பஞ்சலிங்கத்திடம் இருந்து வெற்றிக்கேடயத்தைப் பெறுகின்றார். மத்தியில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை காணப்படுகின்றார். (க-5)

### சீருடை விநியோகம்

சண்டிலிப்பாய்,ஏப்.24

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்கள், ஆண்- பெண் பரிசாரகர்கள், சாதாரண தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு கடந்த வருடத்துக்கான இலவச சீருடைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் பணிமனையின் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் நேரடியாக இவற்றைக் கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.(ஜ-135)

45 வயதிற்கு மேற்பட்ட மருந்துக் கலவையாளர்களுக்கு

# வினைத்திறமைகாண் பரீட்சையிலிருந்து விலக்கு அளிக்குமாறு கோரிக்கை

## சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு மகஜர்

45 வயதுக்கு மேற்பட்ட மருந்துக் கலவையாளர்களுக்கு வினைத்திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்து விதிவிலக்கு வழங்குமாறு அரசாங்க மருந்துக்கலவையாளர் சங்க யாழ்.கிளை கொழும்பிலுள்ள சுகாதாரசேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டுக்கு முன்னர் 45 வயதுக்கு மேற்பட்ட மருந்துக் கலவையாளர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி இச்சலுகை ரத்துச் செய்யப்பட்டது.

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை, வாய்மொழி மூலப் பரீட்சை என்பன கொழும்பில் நடைபெறுவதால் யாழ். மாவட்டத்திலுள்ள மருந்துக் கலவையாளர்கள் கொழும்பு சென்று பரீட்சைகளுக்குத் தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாதுகாப்பு அனுமதி, விமான ரிக்கெற் ஆகியவற்றைப் பெறுவது மற்றும் கொழும்பில் தங்கி நிற்பது ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக மருந்துக் கலவையாளர்கள் பலர் கொழும்பு சென்று இப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளார்கள். அத்துடன் சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பற்றிய சுற்றறிக்கை யாழ். மாவட்டத்திற்குத் தாமதமாக - காலம் பிந்தி - வந்து சேர்வதால் உரிய திகதிக்கு இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது போகின்றது.

இப்பரீட்சையில் சித்திபெறாமையால் யாழ்.மாவட்டத்திலுள்ள மருந்துக் கலவையாளர்களில் பலர் தங்கள் வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம், பதவி உயர்வு என பவற்றை பெறமுடியாதவர்களாக இருந்து வருகின்றனர். 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னர் இப்பரீட்சையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டு நிறுத்தப்பட்ட வருடாந்த சம்பள உயர்வைப் பெற வழி செய்யப்பட்டிருந்தது.

ஆனால் 1997 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் இச்சலுகை நிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை தென்னிலங்கையிலுள்ள மருந்துக் கலவையாளர்கள் உரிய காலத்தில் இப் பரீட்சைக்கு வசதியான முறையில் தோற்றி சித்தி பெற்று உரிய காலத்தில் சம்பள உயர்வு, பதவி நிரந்தரம், பதவி உயர்வு ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வட பிரதேச மருந்துக்கலவையாளர்கள் இவை எதுவுமற்ற நிலையில் இருந்து வருகின்றனர்.

ஆகவே எமது அவல நிலையை சீர்தூக்கி பார்த்து 45 வயதுக்கு மேற்பட்ட மருந்து கலவையாளர்களுக்கு இப்பரீட்சையிலிருந்து முன்பு போல விதிவிலக்கு வழங்கி உதவுமாறு எமது சங்கம் தங்களை வேண்டிக் கொள்கின்றது.

- இப்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கொழும்பிலுள்ள அகில இலங்கை மருந்துக் கலவையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஆகியோருக்கும் மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (ம-135)

வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.24

வடமராட்சிப் பகுதியில் விவசாயத் திணை மேற்கொண்டுவரும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பட்டினி ஒழிப்பு இயக்கத்தினர் விவசாய உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்து கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தங்கி விவசாயத்தை மேற்கொண்டு வருபவர்களுக்கே பட்டினி ஒழிப்பு இயக்கத்தினர் மண்வெட்டி, வாளி, கத்தி மற்றும் விவசாய உள்ளீடுகள் ஆகியவற்றை வழங்கிவருகின்றனர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம அலுவலர் பிரிவில் தங்கியுள்ள 479 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இவ்வாறு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# உரைமழை பொழிவதில் உயர்நிலை பெற்றவர் சித்தன்கேணியூர் ஸ்ரீ அம்பலவாணநாவலர்

ஓர் ஊர் உயரவேண்டும் எனின், அங்கு திருக்கோயில் இருத்தல் வேண்டும்; மக்கள் திருவெண்ணீறும் அணிதல் வேண்டும்; இறைவனை மனம் குழைந்து எண்ணிப் பக்தியுமாய்ப் பாடவேண்டும்; மேலும் பல தனிகளும் அங்கு அமைதல் வேண்டும். இஃது அப்பர் அடிகளின் திருவுள்ளம். இத்தனை சிறப்புக்களும் ஒருங்கமைந்த பேரூர் வட்டுக்கோட்டைத் திருப்பதி.

இந்தத் திருப்பதியின் ஓர் அங்கமாக இதன் தென்பால் அமைந்துள்ளது சித்தன்கேணி; பண்டை நாளில் இங்கு அட்டமா சித்திகளும் கைவந்த சித்தர் வாழ்ந்தனர் என்பர். ஆத்ம சக்தி வாய்ந்த அந்தச் சித்தர் வாழ்ந்தமையால் இப்பெயர் எய்தியதென்பர்.

யாழ்நாடு, தமிழரசர் காலம் முதல், தன்னிகரில்லாப் பாவலர்களையும், செஞ்சொற் கொண்டலாய் நாவலர்களையும் மற்றும் சிந்தனைச் சிற்பிகளையும் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளது. இவர்கள் தாய்த் தமிழகம் சென்று தண்டமிழையும் சைவத்தையும் வளர்த்த செய்தி வரலாறு கண்டதாகும்.

நாவன்மை படைத்த மூவர், இவ்வகையில் அரும்பெருந் தொண்டாற்றினவராவர். அவர்களுள் முன்னவர், நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர் பெருமான்; மற்றையவர் வடகோவை தந்த சபாபதி நாவலர். பின்னவர் எங்கள் வட்டூர் தந்த அம்பலவாண நாவலர். இவர் ஆறுமுக நாவலர் பெருமானால் "எனக்குப் பின் இவர்" என்று பாராட்டப்பட்ட பெருமையினர்.

சீலத்திரு அம்பலவாணநாவலர், சித்தன்கேணியில் மழவராயர் கால் முளையாக விளங்கிய ஆறுமுகம் பிள்ளை அவர்களுக்கும், அன்னை சுந்தரத்தம்மாவுக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றினார். உடன் பிறந்தோர் எண்மருள் நடுநாயகமாகத் திகழ்ந்தார். சங்கானையூர் வேலாயுத உபாத்தியாயரிடம் தொடக்கக் கல்வியைக் கற்றுமுடித்து, உரையாசிரியர் என்று போற்றப்படும் மட்டுவில் க.வேற்பிள்ளைக் குருமணிபால் தமிழிலக்கிய இலக்கணங்களையும், சைவ சாத்திர தோத்திரங்களையும் கற்றுத் தெளிந்தார். நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமானின் அணுக்கத் தொண்டராய் இருந்து சந்தேக விவரீதங்களைக் கேட்டுத் தெளிந்து தமிழ்ப் புலமை படைத்துச் சிறந்து விளங்கினார்.

#### சற்பிரசங்கி

உரைமழை பொழிவதில் உயர்நிலைபெற்ற இவர் செட்டிநாட்டு அன்பர்களால் செந்தமிழ் நாட்டுக்கு சற்பிரசங்கம் செய்யும்பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டார். காரைக்குடி, காளையார் கோயில் தேவகோட்டை முதலிய இடங்களில் எல்லாம் சொன்மாரி பொழிந்து சைவத் தமிழ் மறுமலர்ச்சியை உண்டுபண்ணினார்.

அம்பலவாண சுவாமிகள் தன்டமிழுக்கு மட்டும் நின்றுவிடாமல், சங்கதம் எனப்படும் சமஸ்கிருத மொழியையும், ஆங்கில மொழியையும் சில இந்திய மொழிகளையும் கற்றுணர்ந்து தேறிப் பன்மொழிப் புலவராய்த் திகழ்ந்தனர் என்பர்.

இவர் இந்தியநாட்டு சொக்கபுரம் ஆதீன மடத்தில் துறவியாகி "தாடி சடை வளர்த்துச் சந்நியாசத்திறம் பூண்டு" உயர்நிலை எய்தினார். தாம் பிறந்த ஊரில் தமிழ்ச் சிறார் சைவ சமயச் சூழலில் ஆங்கிலம் பயில வேண்டும் என்பதற்காக வட்டு இந்துக் கல்லூரியை நிறுவுதலிலும் முன்னின்று உழைத்தார். வெற்றி கண்டார்.



#### தமிழன்னைக்குப் புகழ் சேர்த்தார்

இவர் தமிழ்நாட்டு திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி கோயில் தெற்கு வீதியில் திருஞானசம்பந்தர் மடாலயத்தை நிறுவினார். மற்றும் சிதம்பரத்து மாலைகட்டித் தெருவிலும் ஓர் அமைப்பினை நிறுவினார். அவை இன்றும் சைவத் தமிழ்ப் பணி புரிந்து வருகின்றன.

அம்பலவாண முனிவர் அவர்கள செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் பல பல நூல்களை ஆக்கித் தமிழன்னைக்குப் புகழ் சேர்த்தார். காலவெள்ளத்தில் பல நூல்கள் அழிந்துவிட்டன. எனினும் அருணாசல மான்மியம், திருநாவலூர் மான்மியம், வேணுவனலிங்கோற்பவம், நாவலர் சற்குரு மணிமாலை என்னும் ஒருசில நூல்கள் எமக்குக் கிடைத்துள்ளமை எமது பாக்கியமே! நாவலர் சற்குரு மணிமாலையிலே இருந்து ஒரு பாடலைக் காண்போம்.

*" திருவும் மெய்ச் செல்வமும் சீர்த்தியும் ஆயுளும் தேசம் அருள் வருமுறை முத்தியும் சித்தியும் நின் சைவ மா மரபின் மருவினார்க்(கு) என்றும் வழங்குவிப்பாய் அருள் வான்முகிலே குருபரறுமுக நாவல சற்குரு மாமணியே"*

என்ற இப்பாடல் செறிவு, தெளிவு, சமநிலை, ஒழுகிசை என்பனவாந்த சொன்னயம், பொருளயம் மிக்கு அமைந்துள்ளது.

#### பன்மொழிப்புலமை

இவர் அப்பைய தீட்சிதர் செய்த "பிரம தர்க்க ஸ்தபம் என்னும் வடமொழி நூலைத் தமிழாக்கம் செய்துள்ளார். பௌஷ்கர ஆகமத்தை முன்னுரையுடன் வெளியிட்டுள்ளார். இவை இவருடைய வடமொழிப் புலமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன எனலாம்.

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித் தொன்னகரம் துகளாக்கி மீண்டவர். பரஞ்சோதியார் என்னும் திருத்தொண்டர். அவரது குருபூசைத் தினம் சித்திரை 7, பரணி நட்சத்திரமாகும். இந்தத் திருநாளிலேதான் எங்கள் அம்பலவாண நாவலரும் பிறவாயாக்கைப் பெருமேறு எய்தினர். சித்திரை பரணி 24.04.2001இல் வருகின்றது.

#### தமிழ்ச்சங்கத்துக்குக்காணி

சீலத்திரு அம்பலவாண நாவலர் அருமரபில் வந்தவர் சைவத்திருவாளர் சபா.திருச்சிற்றம்பலம் அவர்கள். சுவாமிகள் செய்த சைவத் தமிழ்த் திருப்பணிகள் தொடரப்பட வேண்டும் என்னும் பெருவிருப்பினர். அம்பலவாணநாவலர் சுவாமிகளது சித்தன்கேணி காணியையும், அதில் அமைந்த கட்டடத்தினையும் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

தமிழ்ச் சங்கத்தார் 40 ஆண்டுகளுக்கு மேலாக மரபுவழித் தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் வளர்த்து வருகிறார்கள்.

தமிழ் இளைஞர்கள் - ஆசிரியர்களுக்கு வாராந்தோறும் சனி, ஞாயிறு தினங்களில் பிரவேச, பால, பண்டித வகுப்புகளுக்கு நல்லாசிரியர்களை வைத்து இலவசமாகத் தமிழ் இலக்கண இலக்கியம், சைவசித்தாந்தம் முதலியவற்றை பயிற்றுவித்து வருகிறார்கள். மேலும் சைவப்புலவர் தேர்வுகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்து வருகின்றனர்.

புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார்

குறித்த காணியில் அம்பலவாணநாவலர் நினைவாக மணி மண்டபம் ஒன்று அமைத்தற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணியில் இளமைத் துடிப்பும் செயலாற்றல் திறமும் சைவத் தமிழ்ப் பற்றும் மிக்க வலி.மேற்குப் பிரதேச சபையத் தலைவர் ந.திரிலோகநாதனின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அம்பலவாணநாவலர் காலம் கி.பி. 1855-1932 வரை ஆகும். அம்பலவாணநாவலரை அகத்திருத்தி வாழ்த்துவோம்.

தண்டமிழும் சைவமும் வாழி! வாழி!

*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த.சாதாரணதர, உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும், நாடகமும் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள்: எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். (86956)

## தவறிவிட்டன

சுதுமலை தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியுடைய சரவஷினி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.678592498**V**), விசேட அ. அட்டை (இல.0905018361) யும் மற்றும் ச.உமாக்காந், துர்சிகா என்பவர்களுடைய விசேட அடையாள அட்டைகள் (இல.0905017558, 0905027368) என்பனவும் கொக்குவிலிலிருந்து கோண்டாவில் ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கிடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (86987)

## இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் (புறொயிலர், கல்பேட்ஸ், சேவல்) உடன் தேவை. தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). (86994)

## புறொயிலர் குஞ்சுகள்

சமீரா இன புறொயிலர் குஞ்சுகள உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது "கிளின் சொட்" பின்புறம், பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வடமராட்சியில் சுபகணநாதன் பண்ணை, மாலி சந்தி, அல்வாய். (86988)

## ENGLISH LANGUAGE LITERATURE CLASSES (O/L)

By Experienced London Graduate Teacher Contact: Dr.V.Sriskanthan (Rangitha Medicals) Manipay. (86946)

## விற்பனைக்குண்டு

மீன்களுடன் இரண்டு தொட்டிகள், **I.H.P.** யுனிற் A/C குளிரூட்டியும், சிங்கர் நிச்சி மெசினும் விற்பனைக்குண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன், 370, ஆஸ்பத்திரி வீதி (நவீன சந்தை முன்பாக), யாழ்ப்பாணம். (86969)

## தவறிவிட்டது

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த பொன்னம்பலம் ஜீவலோஜினி என்பவரது தே.அ.அட்டை, வி.அ. அட்டை (இல.0905021977) என்பன 21.04.2001 அன்று ஆனைக்கோட்டை சந்திக்கும் நவாலி அரசடிக்கும் இடையில் (மினி பஸ்ஸில்) பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ கருமாரி நகையகம், யாழ்ப்பாணம் எனும முகவரியில் ஒப்படைத்துதவவும். (86991)

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வராஜா மல்லிகாதேவி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல.645733630**V**), விசேட அடையாள அட்டையும் (இல. 0905018311), மேற்படி முகவரியைச் சேர்ந்த செல்வராஜா ரமேஸ் என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல.0905017644) மாகியப்பிட்டிக்கும் சங்கானைக்குமிடையில் கடந்த (14.04.2001) அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சண்டிலிப்பாய் உபதபாலகத்தில் ஒப்படைத்து உதவவும். (86989)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சொந்த வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு உரிமையாளரான, 31 வயது, படித்த, நற்குணமுள்ள மணமகனுக்குப் பெற்றோர் படித்த, அழகான மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விள.இல. 1262, மே.பா. உதயன். (86703)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் பெற்றோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.24

கடந்த ஜனவரி மாதம் பட்டதாரி பயிலுநர்ஆசிரியர் நியமனம் கிடைத்து இதுவரையும் தமது கடமையைப் பொறுப்பேற்றுக் கொள்ளாதவர்கள் நியமனக் கடிதத்துடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புதிய உயர்கல்விக் கல்லூரிக்குச் சமுகம் தருமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (க-10)

## வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்

## NORTHERN REGION CIGARS PRODUCERS ASSOCIATION

பதிவு எண் / Regd. No. } 4629

உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

"ஒற்றுமையே உயர்ச்சி தரும்"

மேற்படி சங்கத்தில் 21-04-2001 இல் நடைபெற்ற கூட்டத்தில் தற்போதைய நாட்டுச் சூழ்நிலை காரணமாகவும் பாதை சீரின்மை காரணமாகவும் எமது உற்பத்திப் பொருள்களைத் தென்பகுதிக்கு அனுப்புவதற்கு பன்மடங்கு செலவு ஏற்படுவதாலும் இன்னும் பல காரணிகளாலும் எமது தயாரிப்பாளர்கள் தொழிலைச் செய்யமுடியாது கஷ்டப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலும் எதிர்வரும் 01-05-2001 தொடக்கம் 1000 சுருட்டுகள் சுருட்டுவதற்கு 300/= ரூபா சம்பளம் வழங்குவதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

S.S.சச்சிதானந்தசிவம்
தலைவர்

த.குணரத்தினம்
செயலாளர்

(86979)

## BARATHY
சித்தன்கேணி

**A/L 2003**
கலை- வர்த்தகம்

பொருளியல்: சண்
கணக்கீடு: முகுந்தன்
வணிகக்கல்வி: பசில்
அளவையியல்: R.P.சர்மா
தமிழ் / இந்துநாகரிகம் } பாலா
இந்துசமயம்: கரன்
புவியியல்: குமரன்
ஆங்கிலம்: விஜயபாஸ்கர்
நாடக-அரங்கியல்: சுதன்
கிறிஸ்தவம்: வசந்தன்

புதிய. பிரிவு ஆரம்பம்:
நாளை (25-04-2001) புதன் 4.30
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:
இது சித்தன்கேணியில் கலை, வர்த்தகத் துறைக்கு ஒரு தனித்துவம் வாய்ந்த மிகப் பிரபல்யமான கல்வி நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

(86978)

## காரைநகர் ~ தூர்க்காபுரம் பஸ்சேவை ஒருதடவை மட்டுமே!

காரைநகர் டிப்போவினால் தினமும் மூன்று தடவைகள் நடத்தப்பட்டு வந்த காரைநகர் - தெல்லிப்பழை தூர்க்காபுரம் (740 இலக்க) பஸ் சேவை தற்போது ஒரு தடவை மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்கு காரைநகரிலிருந்து புறப்படும் இப் பஸ் சேவை மூளாய், சுழிபுரம், சித்தனகேணி, பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி, மல்லாகம் ஆகிய இடங்களுக்கு ஊடாக தெல்லிப்பழை தூர்க்காபுரத்தை சென்றடைகின்றது.

அங்கு இரவு தரித்து நின்று மறுநாள் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காரைநகரைச் சென்றடைகின்றது.பஸ் சேவை குறைக்கப்பட்டதால் பிரயாணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
01 - 02 - 1915

மறைவு
25 - 03 - 2001

### திருமதி சோமசுந்தரம் சொர்ணம்மா
(பாக்கியம்)

எமது குடும்பத்தின் குல விளக்கே!
தீபம் அணைந்தாலும் எமது மனங்களில்
என்றென்றும் நினைவில் ஒளி வீசிக்
கொண்டேயிருப்பீர்கள்!

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்குகொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் எம்முடன் துயர்பகிர்ந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு-

இன்று (24-04-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத் தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(86997)

## தந்தை செல்வா நினைவு நாள்

*தந்தை செல்வா நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்பெற்ற நினைவுக் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான*

### பரிசில் வழங்கல் நிகழ்வு



*காலம்* : நாளை (25.04.2001) புதன்கிழமை பி.ப.2.30 மணி.
*இடம்* : யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கைலாசபதி கலை அரங்கு..

*தலைவர்:* பேராசிரியர் அ.சண்முகதாஸ்.
(உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி)

*நினைவுப்பேருரை:* மேதகு ஆயர் சு.ஜெபநேசன் அவர்கள்
(தென்னிந்தியத் திருச்சபை)

"தந்தை செல்வாவின் காலமும் கருத்தும்"

*நினைவஞ்சலி*

*காலம்* : 26.04.2001 வியாழன் காலை 9.30 மணி.
*இடம்* : தந்தை செல்வா நினைவிடம், யாழ்.நகர்.



மேற்படி. நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

*தந்தை செல்வா நினைவுத் தேசிய அவை.*
*தந்தை செல்வா அறங்காவற் குழு.*

(86996)

# வலி. தெற்குப் பிரதேசத்திற்கென கால்நடை வைத்திய அலுவலகம்

வலிகாமம் தெற்கு, ஏப். 24

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்கென தனியானதொரு கால்நடை வைத்தியர் காரியாலயம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவு விவசாயிகள் குழுக்கூட்டத்தில் கால்நடை வைத்தியர் காரியாலயத்தை சுன்னாகத்தில் அமைப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் தீர்மானம் யாழ். மாவட்ட கால்நடை வைத்தியர் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கால்நடை வைத்தியர் பிரிவின் கால்நடை வைத்தியராக திருமதி ஜி. சிவபாதசுந்தரம் கடமையாற்றுவார்.

வலிகாமம் தெற்கு பிரதேச மக்களின் கால்நடை வைத்திய தேவைகளை இதுவரை காலமும் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் அலுவலகமே கவனித்து வந்தது.

(க-152)

## நித்திரையிலிருந்த பெண்ணின் சங்கிலிகள் அபேஸ்

நெல்லியடி, ஏப். 24

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பெண்மணி ஒருவரின் கழுத்திலிருந்த 6 பவுண் நிறையுடைய இரண்டு சங்கிலிகளை அறுத்த திருடன் மதிலால் ஏறி தலைமறைவானான்.

இத் துணிகரச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணியளவில், புலோலி கிழக்கு மாதனையில் இடம்பெற்றது.

இது குறித்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-109)

## சந்தையில் கதவு இல்லாத மல சல கூடம்

நெல்லியடி, ஏப். 24

வடமராட்சிப் பகுதியின் கேந்திர நிலையமான பருத்தித்துறை மரக்கறிச் சந்தையில் மல சல கூடம் இருந்தும் அதற்குக் கதவு இன்மையால், வியாபாரிகள் பெரும் இன்னலடைந்து வருகின்றார்கள்.

(க-109)

### 4 சுதந்திர ஆணைக்குழுக்களை அமைக்கும்

# ஐ. தே. கவின் திட்டத்தை முறியடிக்க நாடாளுமன்றை ஒத்திவைக்க முடிவு?

கொழும்பு, ஏப். 24

மே மாதத்தில் எதிர்க்கட்சியினர் நான்கு சுதந்திர ஆணைக்குழுக்களை அமைக்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தடுத்து நிறுத்தும் வகையில், அடுத்த மாதத்திற்கான அவசரகாலச் சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டதும் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸ், நீதித்துறை, தேர்தல், பொதுச் சேவைக்கான சுதந்திர ஆணைக் குழுக்கள் உடனடியாக அமைக்கப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை அவற்றை அரசமைப்புத் திருத்தத்துடன் சேர்த்துச் சமர்ப்பிப்பதே அரசின் நோக்கம்.

இதேவேளை, ஒஸ்லோவில் வைத்து ஐ தே. க. தலைவர், சமாதான முயற்சிகளுக்கு ஐ. தே. க. அளித்து வரும் ஆதரவுக்குக் கைம்மாறாக நான்கு சுதந்திர ஆணைக் குழுக்களுக்கும் அரசாங்கம் ஆதரவு வழங்க வேண்டும் என்று நோர்வேயின் தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், பலப்படுத்தவும் இந் நடவடிக்கைகள் மிகவும் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டு இப்பொழுது சுதந்திர ஆணைக்குழுக்கள் சட்ட வரைவொன்றை வரைந்து முடியும் தறுவாயிலுள்ளது. ஐ. தே. க. பிரதித்தலைவர் கரு ஜயசூரிய இந்தப் பிதிகளை மே மாதம் நிச்சயம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் இவ்விதம் முன்னேற்றம் கண்டு வரும் நிலையில் அரசாங்கம் ஓர் இக்கட்டு நிலைக்குள் தள்ளப்பட்டு வருகிறது. இக் காரணங்களால் மே மாதம் 10 ஆம் திகதியுடன் நாடாளுமன்றம் ஒரு மாதம் வரையான காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு பின்னர் அடுத்த கூட்டத்தொடர் ஜனாதிபதியால் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைக்கப்படலாம் என்று அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்துள்ளனர்.

(க-20)

### ஆசிரியர்களின் திறமை காரணமாகவே

# அறிவும் ஆற்றலும் மிகுந்து விளங்கினர் அன்றைய மாணவ சமுதாயத்தினர்

### வட்டு. மத்திய கல்லூரி பவள விழாவில் அரச அதிபர்

வட்டுக்கோட்டை, ஏப். 24

கல்வியானது மனிதரை அறிவுள்ளவர்களாக உருவாக்குவதற்கு உதவ வேண்டும். முன்னர் எமக்குக் கற்பித்த ஆசிரியர்கள் புத்தகக் கல்வியுடன் நின்று விடாது, அறிவு ரீதியான கல்வியையும் சேர்த்துப் புகட்டினர். இதனால் அன்றைய மாணவ சமுதாயம் அறிவும், ஆற்றலும் படைத்ததொரு சமுதாயமாக விளங்கியது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பவளவிழா இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க. இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அரசாங்க அதிபர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு பாடசாலை 75 வருடகாலமாகச் செயற்பட்டுப் பவளவிழாக் காணுவது என்பது இலகுவான விடயமல்ல. அன்றைய காலகட்டத்தில் கிறிஸ்தவ பாடசாலைகள் பல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. அதற்கு எதிராக தமிழ் மொழியையும், சைவத்தையும் அழிந்து போகவிடாது பாதுகாக்கும் நோக்குடன் பல பெரியார்கள் இதுபோன்ற சைவப் பாடசாலைகளை ஆங்காங்கே நிறுவினர்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

ஒரு பிரதேச மக்களின் வாழ்வு வளம் பெற அங்கு நல்லதொரு கல்லூரி, நல்ல ஆலயம் என்பன இருக்க வேண்டியது அவசியம். மக்களின் கல்வி அறிவுக்கும், நற்பண்புகளுக்கும் ஆன்மீக விருத்திக்கும் இவையே அடித்தளங்களாக அமைகின்றன.

இப் பகுதியிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும்என்ற நோக்கிலே 75வருடங்களுக்கு முன்பு அமரர் இராசரத்தினம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இக் கல்லூரி இன்றும் தனது பணியை அந்த இலட்சியத்திற்கேற்ப ஆற்றிவருகின்றது.

#### கல்லூரி பெயர் மாற்றம்

கல்லூரியின் பெயர் மாற்றம் பற்றி இரு விதமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. நவீன உலகில் ஒரு மேலைத்தேய பண்பாடு என்ற வகையில் மாணவர்களினதும், கல்லூரியினதும் எதிர்கால நலனை முன்னிட்டு எடுக்கப்பட்ட முடிவே இப் பெயர் மாற்றம் எனக் கருதுகின்றேன். தமிழ்ப் பேராசிரியராகிய நான் உயர் பட்டப் படிப்புக்கு தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குசென்றிருக்க வேண்டும். தமிழ் படிக்க இங்குதான் உகந்த இடம். ஆனால் இங்கிலாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக் கழகத்திற்குச் சென்று அங்குதான் உயர் பட்டப் படிப்பை மேற்கொண்டேன். அங்கு கல்வியை மேற்கொண்டதால் பல விதங்களில் நன்மை ஏற்படும் என்று கருதி இவ்வாறு செயற்பட வேண்டியிருந்தது. ஆகவே இக் கல்லூரியின் பெயர் மாற்றமானது இங்கு கற்கும் மாணவர்களுக்கு ஓர் உந்து சக்தியாக - வெளி உலக தொடர்புகளுக்கு உதவியாக அமையும் என்று கருதுகின்றேன் — என்றார்.

#### பேச்சுக் கலைத் தேர்ச்சி அவசியம்

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆசியுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

இன்றைய நிலையில் — இருண்ட வாழ்வில் ஒளியூட்டக் கூடிய இது போன்ற விழாக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பனவாக உள்ளன. தமிழுக்கு பாடுபட்டவனுக்கு சாவில்லை என்று அன்று பாட்டுக்கொரு புலவன் பாரதி சொன்னான். பாரதிக்குஎன்றும் சாவில்லை. அறிஞர் அண்ணா முன்பு ஒரு முறை சொன்னார் எத்தனை தமிழ் விழாக்கள் நடைபெற்றாலும் தமக்கு அது மகிழ்ச்சியே என்று.

மாணவர்கள் பேச்சுக் கலையில் தேர்ச்சிபெற வேண்டியது அவசியம். பேச்சுக்கலை இன்று அருகிவருகிறது. மேடைகளில் மாணவர்களுக்கு பேசச் சந்தர்ப்பம் கொடுத்து பேச்சுக் கலையில் அவர்களைத் தேர்ச்சியடையச் செய்ய வேண்டும். அப்போது தான் அவர்களின் திறமைகளும் ஆற்றலும் வெளி வரும் — என்றார்.

ஓய்வு பெற்ற வலி. மேற்கு பிரதேச செயலரும், யு. என். ஏச்.சி.ஆர். நிறுவன இணைப்பாளருமான கா. சந்திரராசா உரையாற்றுகையில் கூறியதாவது: —

திருஞானசம்பந்தர் வித்தியாசாலை என்ற பெயருடன் 75 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் செயற்பாடுகள் பற்றி பிரதேச செயலராகப் பணியாற்றிய வேளையில் அறிந்து கொள்ள முடிந்தது. 25 வருடகாலமாக இங்கு கடமையாற்றி வரும் அதிபர் சிவஞானபோதம் தமது முழு நேரத்தையும் இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்காகச் செலவிட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு பணியாற்றி வருகின்றார். கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் இக்கல்லூரி முன்னேற்றமடைந்து வருகின்றது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா. தனபாலன் "சமகால கல்வி" என்ற தலையங்கத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். ஒருவனது ஆளுமை விருத்திக்கு பெரிதும் பங்களிப்பது கல்வியா? அனுபவமா? என்ற பட்டிமன்றமும் நடைபெற்றது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ம-135)

## செய்திக் கொத்து

### ஆலயத்துக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஏப். 24

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு மாதகலைச் சேர்ந்தவரும், தற்போது கனடா நாட்டில் வசித்து வருபவருமான அன்பர் ஒருவர் புதிய சகடை ஒன்றை வழங்கியுள்ளார். சுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சகடை தற்போது நடைபெற்று வரும் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்தபோர்க்கால அனர்த்தங்களின்போது இவ் ஆலயத்தின் சகடை மற்றும் பல உடைமைகள்பலத்த சேதமடைந்தன.

(ஐ-135)

### ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஏப். 24

இளவாலை சித்திரைமேழி ஞானவைரவர் ஆலயத்தில், தற்போது புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடியார்கள் வழங்கி வரும் நிதியைக் கொண்டு இப்புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருவதாகவும், எதிர்வரும் ஜூலை மாதத்தில் இவ்வாலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

### அணைச் சுவர்

வலி.தென்மேற்கு, ஏப். 24

அராலிப் பகுதியில் இருந்து விவசாய நிலங்களுக்குள்வரும் உவர் நீரைத் தடுப்பதற்காக நவாலி விவசாயிகள் சம்மேளனம் பல லட்சம் ரூபா செலவில் அணைச்சுவரை அமைத்து வருகின்றது.

(க-158)

### கலைவிழா

தென்மராட்சி, ஏப். 24

கரவெட்டி முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா கடந்த 18 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் ப. இரவீந்திரன் கலந்து கொண்டார்.

(க-117)

### வீதியைத் திருத்தக் கோரிக்கை

குருநகர், ஏப். 24

யாழ். மாட்டீன்வீதி குண்டுங்குழியுமாகக் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கப்பலுக்குச் செல்லும் பயணிகள் கூட இந்த வீதியையே பாவிக்கிறார்கள்.

அத்துடன் இவ்வழியூடாக யாழ். நகருக்கும் அதிகளவில் மக்கள் சென்று வருவதனால் இந்த வீதியை உடனடியாகத் திருத்த வேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க-5)

### ஸ்ரீசம்புநாதர் சுவாமி திருமடம்

சுழிபுரம், ஏப். 24

சுழிபுரம் வடக்கு ஸ்ரீசம்புநாதர் சுவாமி திருமடம் கட்டப்பட்டு பூர்த்தியாகவுள்ளது. மடத் திறப்பு விழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (க-28)

### பொலிகண்டியில் பால் நிலையம்

வடமராட்சி, ஏப். 24

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் பால் கொள்வனவு, விற்பனை நிலையக்கிளை ஒன்று பொலிகண்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்ணையாளர்களும், பாவனையாளர்களும் இக்கிளை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் கேட்டுள்ளது. (க-113)

### ஆலய ஒலிபெருக்கி சாதனங்கள் திருட்டு

நெல்லியடி, ஏப். 24

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த இரவு நேரம் ஆலயம் ஒன்றின் யாக சாலைக்குள் ஓடு பிரித்து உட்புகுந்த திருடர்கள் ஆலயத்துக்குச் சொந்தமான 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்களை திருடிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதுகுறித்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க-109)

# 12 தொழிற் சங்கங்கள் இணைந்து மேதினம் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணத்தில் 12 தொழிற்சங்கங்கள் இணைந்து கூட்டாக மேதினத்தைக் கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வடபிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டு மேதினக் கூட்டம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று தொழிற் சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை வர்த்தகர் கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், வடக்கு—கிழக்குமாகாண அரசாங்க பொது (சிற்றூழியர்) சங்கம், நவலங்கா தொழிலாளர் சங்கம், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், இலங்கை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம், இலங்கை ஆசிரியர்சங்கம், கைத்தொழில் பொதுத் தொழிலாளர்சங்கம், சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன், வடபிராந்திய உப்பள சேவை நலச்சங்கம் போன்ற தொழிற் சங்கங்களே இம்முறை ஒன்று சேர்ந்து மேதினத்தைக் கொண்டாடவுள்ளன. (ஐ-11)


## தவறிவிட்டது

சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கும் சுன்னாகம் தபாற்கந்தோருக்குமிடையில் கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

★ சன்மானம் வழங்கப்படும் ★

சேவையர் சிற்றம்பலம்
மயிலணி, சுன்னாகம்.

(87063)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் சிவமணி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும், திருமலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சிவமணி அவர்கள் 22 - 04 - 2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியாரும், சிவபாதன் (ஆஸ்திரேலியா), சிவசக்தி (திருமலை), சிவநாமன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரநாதன் (Senior), சாந்தா, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜிதரன், தபோதரன், சஜிந்தா, சந்தோஸ், சதோஸ், சகானா, சங்கித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி சின்னத்துரை தங்கரத்தினம், நா. மகேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும், செல்வரத்தினம் (கற்கண்டு), சோமசுந்தரம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (23 - 04 - 2001) திங்கட்கிழமை திருமலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சோமசுந்தரம்,
க. திருநாவுக்கரசு.
(மைத்துனர்)

58, கல்லூரி வீதி,
திருகோணமலை,
T. P. 026 — 23190

(86984)

## பொன்னம்பலம் பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரஞ்சோதி 20-04-2001 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் சசி, கேசவன், இராகவன், மீரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன். குமாரசாமி, க. சரஸ்வதி (கொழும்பு), க. அன்னபூரணி (முடக்காடு), பொ. தணிகாசலம் (லண்டன்), வே. யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. விக்னராசா
(மருமகன்)

தோலை,
அல்வாய்.

(87056)

## செபஸ்ரியன் சந்தணம் யோசப்

பண்டாரவளையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் சந்தணம் யோசப் அவர்கள் நேற்று (23-04-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியன் - அன்னமேரி தம்பதிகளின் மூதத புதல்வனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் றொசானின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பற்றிக், றெஜினா மற்றும் லூர்துமேரி, பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரமேஸ், சுரேஸ், சுதாகரன், சுதா ஆகியோரின் மாமனாரும் கிங்ஸ்லி, யோகா ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரது இறுதி அடக்கம் நேற்று (23-04-2001) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இரங்கற் திருப்பலியுடன் புனித மிக்கேல் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
J. திரேசம்மா (மனைவி),
J. றொசான் (மகன்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(87072)

## கலந்துரையாடல்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-3)

## கணக்கியல் டிப்ளோமா பரீட்சை

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா 4 ஆம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவை கிடைக்கப் பெறாத மாணவர்கள் நிறுவன இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறும் உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரி. இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (க - 6)

## குடும்பநல சேவையாளர் கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையில் பணிபுரிந்து பதவி இழந்த குடும்ப நல சேவையாளர்கள் தொடர்பான இறுதி நடவடிக்கை குறித்து ஆராய இன்று கலந்துரையாடல் ஒன்றை யாழ். மேயர் என். ரவிராஜ் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு சமுகம் தரும்படி கோரும் கடிதங்களை சம்பந்தப்பட்ட குடும்ப நல சேவையாளர்களுக்கு நேற்று அவர் கடிதங்களை அனுப்பியுள்ளார். (ஐ-3)

## நல்லூர் இளைஞன் ஞாயிறன்று கைது

நல்லூர்ப்பகுதியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொண்டலடி ஒழுங்கை நல்லூரைச் சேர்ந்த செல்லத்துரை ரஞ்சன் (வயது 25) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இக்கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

# சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய், ஏப்; 24

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், 10ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ம-135)

★ ★ ★

கோப்பாய் மத்தி நாவலடி முத்துமாரி அம்பாள் திருக்கோயில் கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 5 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது

சிவஸ்ரீ க.குகதாஸ் குருக்கள் பலஸ்தான கும்பாபிஷேகத்தைக் காலை9மணிக்கு நடத்திவைப்பார். (க-15)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான யந்திர பூசை நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தினமும் காலை 8மணி முதல் நடைபெறவுள்ளது. யந்திர பூசை தொடர்ந்து 45 நாள்களுக்கு நடைபெறும்.

மேற்படி ஆலயத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்த யந்திர பூசை ஆரம்பமாகிறது. (க-7-28)

சுழிபுரம் கிழக்கு மாணிக்கம் வைரவர் கோயிலில் பன்னிரு திருமுறைப்படிப்பு முழுவதும் பன்னிரண்டு தினங்கள் நடைபெற்று வருகின்றது. ந. சிவரஞ்சன் தலைமையில் படிப்பு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை படிப்பு பூர்த்தி செய்யப்படும். முடிவில் அன்று நண்பகல் அன்னதானம் இடம்பெறும். (சு-28)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு பூதநாத சுவாமி (பூதவராயர்) ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ)

★ ★ ★

ஏழாலை பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் வழிபாட்டு விழா நாளை புதன்கிழமை இரவு 8மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் காலை 10 மணி வரை இடம்பெறவிருக்கின்றது.

கொடித்தம்ப பூசை, அலங்கார தீபாராதனை, தீக்குளித்தல் ஆகியன இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படும். (ஐ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை காலை 8. 30 மணிக்கு வடமராட்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும் ஆட்டங்களில் 15,17 வயதுப் பிரிவுகளில் வடஇந்து மகளிர் கல்லூரியும் மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் மோதவிருக்கின்றன. (ஐ-3)

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஆர். ராஜ்குமார் வெற்றிக் கிண்ணத்துக்காக ஆர். வசந்தகுமாரின் அனுசரணையுடன் வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி—சென்ரலைட்ஸ் வி. க. 'புளூஸ்' அணி எதிர் ஜொலிஸ்ரார் வி. க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 5 மணி—சென்ரலைட்ஸ் வி. க. 'சொக்ஸ்' அணி எதிர் பற்றிஸியன் வி. க. அணி. (ஐ-3)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்**

★ 17 வயது—ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தி. எதிர் வரணி ம. வி.

★ 19 வயது—மகாஜனாக் கல்லூரி - எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**யாழ். சென்ரலில்**

★ 17 வயது — ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி.

★ 19 வயது — புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி (ஐ-3)

## கைதடியில் முன்பள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 24

கைதடி மேற்கு பராசக்தி முன்பள்ளி நாளை புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்று முன்பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரச சிறுவர் நன்நடத்தைப் பிரிவின் கீழ் இயங்கும் இப்பாடசாலை கடந்த பதினொரு மாதங்களாக மூடப்பட்டிருந்தது. (ஐ-5)

## யுவதி உட்பட நால்வரைக் காணோம்

யாழ்ப்பாணம், ஏப். 24

யுவதி உட்பட நான்கு பேர் காணாமற் போயிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கணபதி ஜெயசுவீந்திரன் (வயது 21 - நாவற்காடு, வரணி), சின்னத்துரை கிருபாகரன் (வயது 21— குடமியன், வரணி) ஆகியோர் கடந்த 14 ஆம் திகதியும் —

முருகையா தயாளினி (வயது 21 — வண்ணார் பண்ணை) என்பவர் கடந்த 19 ஆம் திகதியும், நவரட்ணம் வாகீஸ்வரன் (வயது 20 — கல்வியங்காடு) என்பவர் 16 ஆம் திகதியும் காணாமற் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

## மட்டுவில் இளைஞர் கால் இழப்பு

யாழ்ப்பாணம் ஏப்; 24

மட்டுவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிதிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் தனது இடது காலை முழங்காலுக்குக்கீழே இழந்தார்.

மட்டுவில் தெற்கு வேரற்கேணியைச் சேர்ந்த கந்தையா சிவச்செல்வம் (வயது 30) என்பவரே இவ்வாறுகால் துண்டிக்கப்பட்டவராவார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-5)

# பொலீஸ் நிலையத்தை இடம்மாற்றி மணிக்கூண்டு வீதியைத் திறக்குக!

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் பிரேரணை

யாழ்ப்பாணம்,ஏப்.24

தந்தை செல்வா சதுக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் -

மணிக்கூண்டுக் கோபுர வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடவேண்டும் என்றும் கோரி யாழ். மாநகர சபை புளொட் அமைப்பின் உறுப்பினர் முத்துக்குமாரு தவநாதன் பிரேரணை ஒன்றுக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக கூட்டம் நாளை மேஜர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விவாததிப்பதற்காகவே இந்தப் பிரேரணை முனறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரேரணையின் விவரம் வருமாறு:-

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் அரச பயங்கரவாதிகளினால் எரித்து நாசமாக்கப்பட்ட யாழ்.பொதுசன நூலகப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் வேளையில் அப பிரதேசம் 'தந்தை செல்வா சதுக்கம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் மணிக்கூண்டுக் கோபுரம், திறந்த வெளியரங்கு, சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் பாவனை அதிகரிக்கும் போது அங்கு அமைந்திருக்கும் பொலீஸ் நிலையம் அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும்.

மேலும் பொலீஸ் நிலையம் இந்தப் பிரதேசத்தில் இருப்பதால் மணிக்கூண்டு வீதியில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பொலீஸ் நிலையம் இடம்மாற்றப்பட்டு மணிக்கூண்டு வீதி மக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து திறந்து விடப்பட வேணடும்.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி ஆகியோர் உட்பட சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

# பாவனைத் திகதியை அழித்து விட்டு பிஸ்கட் பைக்கற்றுகள் விற்பனை

## புதிய திகதியைப் பொறித்து மோசடி

சண்டிலிப்பாய்,ஏப்.24

பிஸ்கற் பைக்கற்றுக்களில் காலாவதியாகும் திகதியை மையினால் அழித்து விட்டு புதிய திகதியைப் பொறித்து விற்பனை செய்யும் மோசடி ஒன்றை சுன்னாகம் பகுதியில் உள்ள கடையொன்றில் பரிசோதனை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டு பிடித்தனர்.

கடந்த வாரம் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு சுன்னாகம் பட்டினப்பகுதியிலுள்ள கடைகளில் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டது. பிஸ்கட் பைக்கற்றுக்களைத் துருவித் துருவி நுணுக்கமாக ஆராய்ந்த போது அவற்றில் பழைய திகதியை அழித்துவிட்டு புதிய திகதி இடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை -

மற்றொரு கடையில் இக் குழுவினர் பரிசோதனை செய்த போது அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அரிசிமாப் பைக்கற்றுகளிலும், மிளகாய்த்தூள்ப் பைக்கற்றுக்களிலும் வண்டுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

(ஐ-135)

# கைதடியில் 6 பாடசாலைகள் நேற்று இயங்கத் தொடங்கின

யாழ்ப்பாணம்,ஏப்.24

கடந்த பதினொரு மாதங்களுக்குப் பின்னர் கைதடியிலுள்ள ஆறு பாடசாலைகள் நேற்று முதல் இயங்கத் தொடங்கின.

கடந்தகால இடப் பெயர்வுகளை அடுத்து கைதடியிலுள்ள பாடசாலைகள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு மாற்றப்பட்டு தற்காலிகமாக இயங்கிவந்தன.

தற்பொழுது கைதடிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதை அடுத்து இந்தப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக கைதடியில் தமது சொந்தக் கட்டடங்களில் நேற்று ஆரம்பமாகின.

நேற்று ஆரம்பமாகிய பாடசாலைகளில் மாணவர்களின் வரவு திருப்திகரமாக இருந்ததாக அங்கிருந்து நகருக்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

கைதடிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பாடசாலை பஸ் சேவை ஒன்று நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலையில் புறப்படும் இந்த பஸ் சுண்டிக்குளி, கோப்பாய்ச் சந்தி ஊடாக கைதடி வடக்கு வரை நடைபெறுகின்றது.

(ஐ-5-73)

# பேச்சுக்கள் ஸ்திர நிலையை எட்டும்வரை அரசாங்கம் யுத்தநிறுத்தம் செய்யக்கூடாது!

## படைஅதிகாரிகள் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.24

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஸ்திரமான கட்டத்தை அடையும் வரை போர் நிறுத்தம் செய்யக்கூடாது என்று இராணுவ உயர்பீடம் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் நடந்த தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளே மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டை ஒட்டி அரசு அறிவித்த ஐந்து நாள் யுத்தநிறுத்தத்தையும் நீடிக்க வேண்டாம் என்று அவர்கள் அங்கு வலியுறுத்திக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவும் பிரச்சனைக்கு அரசியல்தீர்வு அவசியம் என்பதையும் இராணுவ அதிகாரிகள் அங்கு சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-3)

### திருக்குறள் மனனப்போட்டி

வலிகாமம் தெற்கு,ஏப்.24

வலிகாமம் கல்வி வலயத்தில் வலயமட்டத்திலான பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் திருக்குறள் மனனப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ள இப்போட்டியில் கோட்டமட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டிகளில் முதல் ஐந்து இடங்களை பெற்ற மாணவர்கள் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர். (க-152)

### பொது அறிவு, ஓவியப்போட்டிகள்

அடுத்த மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் ஓவியம் மற்றும் பொதுஅறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதனையொட்டி யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் பொதுஅறிவுப்போட்டிக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10)

### ஆயுதங்களுடன் சிப்பாய் தப்பி ஓட்டம்

வவுனியாவில் இருந்து இரத்தினபுரிப் பகுதியில் உள்ள குருவிட்ட இராணுவ முகாமுக்கு டிரக்கில் சென்று கொண்டிருந்த படையினரில் ஒருவர் சக படையினரின் ஆயுதங்களைச் சுருட்டிக்கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

கல்கமுவ நகரில் கடந்த சனியன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து குருவிட்ட இராணுவ முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிரக் கல்கமுவவில் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தப்பட்டதாகவும் -

அச்சமயம் பிரஸ்தாப சிப்பாய் தேநீர் அருந்தச் செல்லாமல் டிரக்கிலேயே தங்கியிருந்து விட்டு சக சிப்பாய்கள் கடைக்குச் சென்றதும் அவர்களின் ஆயுதங்களை உரப்பை ஒன்றில் போட்டு எடுத்துக் கொண்டு தப்பிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


**ஹாட்லி கவல்கின்றது**

**அமரர் க.பூரணம்பிள்ளை**

ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், நிர்மாணச் சிற்பியும், கல்வியுலகின் புகழ் பூத்த சான்றோனுமாகிய

**க.பூரணம்பிள்ளை**

அவர்கள் 22.04.2001 இல் லண்டனில் காலமானார்.

அன்னாரின் இழப்பினால் கவலையிலாழ்ந்த அனைவருடனும் ஹாட்லிச் சமூகமும் இணைந்து கொள்கிறது.

அவர்தம் ஆன்மா சாந்தியடைவதாக!

ஹாட்லிக் கல்லூரிச் சமூகம். (C/16420)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 1924 - 04 - 27



உதிர்வு 2000 - 05 - 04

**அமரர் தம்பியையா கிருஷ்ணபிள்ளை**

(காலி சிவன்கோயில் கணக்காளர், சாஸ்திரிஜயா)

பாசத்தின் உறைவிடமே எங்கள் அப்பா
ஆண்டுகள் ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவுத்துயர்
ஆண்டவர் பணி செய்வதே உன் மூச்சு என்றாய்
அவர் பாதவடி செய்வதற்கோ?
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு சென்றீர்கள்.

*அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*30, கல்லூரி வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

(87074)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதரர்கள்

புலமைப் பரிசில் பரீட்சை – 2001

**புதிய பிரிவுக்கு மாணவர்களை அனுமதித்தல்**

இது வரை விண்ணப்பிக்காதவர்கள் உடன் பதிவு செய்துகொள்ளவும்.
பதிவுகள் இன்றும் நாளையும் மட்டுமே ஏற்கப்படும்.
முதல் 100 மாணவர்களே அனுமதி.
பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும் காலை 7.00 - 9.00 (பு.நே.)

**BOND யாழ்நகர்.**

(87070)

**விற்பனையாகின்றது**

அட்சரகணிதம் - 1

**ALGEBRA**

*வெளியீடு* :- யாழ்ப்பான விஞ்ஞான சங்கம்

*ஏக விநியோகஸ்தர்கள்:*

***மண்டேலா புத்தக நிலையம்***

இல.2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (87073)

**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 31 - 07 - 1936



மறைவு 24 - 04 - 1996

**அமரர் வேலுப்பிள்ளை பஞ்சலிங்கம்**

(இ.போ.சபை, யாழ்ப்பாணம்)

*ஆண்டு ஐந்து சென்றாலும்*
*உமது ஆசை நிறைவேறியது அப்பா*
*பிரிவால் எம் துயரம் மாறாது அப்பா*

*86/1, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(87069)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
(மகள் வசந்தகுமாரி)

**CONDOLENCE**

**Mr.K.Pooranampillai**

Former Principal of Hartley College and St.John's College passed away peacefully at his daughter's residence:

12,Tennyson Avenue,
Ruggby,
CV 22 6 JH
Warwick share,
U.K.

Funeral arrangements will be notified later.
Hartley College P.P.A. expresses its profound sympathies.

Hartley College P.P.A. (Parent Body) (C/16421) Hartley College P.P.A. (Colombo Branch)

# யாழ். மக்கள் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்கின்றனர்

## தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.24

தமிழ் மக்கள் தமது ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதை யாழ் விஜயத்தின் போது உணரமுடிந்தது.

தேசிய சமாதானப் பேரவைத் தலைவர் ஜெகான் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ள அவர் அங்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகளை ஒதுக்கி விட்டு மேற்கொள்ளப்படும் எந்தவித முயற்சிகளாலும் சமாதானம் வராது. நம்பிக்கை என்ற விடயத்தைக் காரணம் காட்டி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதை அரசு காலம் தாழ்த்துவதால் நிலைமை மேலும் சிக்கலாகுமே தவிர இலகுவாகமாட்டாது. அதனால் மேலும் தாமதிக்காது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரு தரப்புக்களும் உடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இதையே யாழ்.மக்களும் விரும்புகின்றனர்.

யாழ்.விஜயத்தின் போது நான்கு செய்திகளை யாழ்.மக்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

✪ சமாதானம் உடன் ஏற்பட வேண்டும்.

✪ புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள். அவர்கள் பங்கு எடுக்காத எந்த சமாதான முயற்சியும் நிலைத்து நிற்காது.

✪ தெற்குடனான சகல தொடர்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் ஏற்படுத்தவேண்டும்.

✪ யுத்த சூழ்நிலையில் வாழும் மககளின் தேவைகளை அரசு யதார்த்தமாக நிறைவேற்றவில்லை. அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

யாழ்.மக்கள் தெற்கு மக்களுக்கு விடுக்கும் செய்திகள் இவையே - என்றுள்ளது. (ஐ-3)

### அரசைக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர் இடம்பெற்றுள்ளனர்.

அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் இருப்பார் என்றும் முடிவு செய்யப்பட்டது.

ரணிலின் தலைமை மீது அதிருப்தி அடைந்திருப்பதாகக் கூறப்படும் எம்.பிக்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசவேண்டும் என்றும அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ஒ-3-4)

### சந்திரிகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்ற முயற்சி எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஐ.தே.கவின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரம சிங்கவை வெளியேற்றுவதற்குக் கட்சிக்குள் ஒரு சாரார் முயன்று வருவது குறித்தும் அனுரா ஜனாதி பதியுடன் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### கல்விமான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுத்துறையிலும் ஹாட்லிக் கல்லூரியை பூரணம்பிள்ளை சிறப்படையச் செய்தார்.

67 - 76 காலப்பகுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபராகவும் பூரணம்பிள்ளை கடமையாற்றினார்.

அகில இலங்கை அதிபர்கள் சங்கம், பாடசாலைகள் மட்டத்திலான கிரிக்கெட் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் பூரணம்பிள்ளை பதவிகளை வகித்துள்ளார். இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவராகவும் விவிலிய ஆராதனைகளை நடத்துபவராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்.

இவர் துன்னாலை தெற்கு மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவராவார்.

அமரர் பூரணம்பிள்ளை லண்டன் கலைப்பட்டதாரி. பிரிட்டனின் பெர்மிங்காமில் பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறியிலும் பட்டம் பெற்றவர்.

துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் பூரணம்பிள்ளையின தந்தை கணபதிப்பிள்ளையும் ஹாட்லிக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவராவர். (அ-ஒ-173)

### நாட்டுக்கு அபகீர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் கிடைக்கவில்லை என்றும் கொலையுண்டவரின் வீட்டுக்கு அருகிலுள்ள அயலவர்களை இது தொடர்பாக விசாரணை செய்தபோதும் ஆதாரபூர்வமான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பொலீஸார் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசேட பொலீஸ் விசாரணைக்குழுவை நியமித்ததன் மூலம் இக்கொலைக்குக் காரணமானவர்களை இனம் காண்பதற்கு பொலீஸ்மா அதிபர் விசேட அக்கறை காட்டியுள்ளதை பொலீஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்த நீதிவான் இச்சம்பவம் தொடர்பாக பல சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் அக்கறை செலுத்தி வருவதையும் சுட்டிக்காட்டினார்.

மேற்குறிப்பிட்ட விடயங்களினைக் கவனத்திற் கொண்டு இக்கொலைக்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டால், பொலீஸ் திணைக்களத்துக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் அது அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

கொலைச் சம்பவம் நடந்து 15 நிமிடங்களுக்கிடையில் 512 ஆவது பிரிகேட்டுக்கு அது குறித்து தகவல் கிடைத்திருந்தது. இத்தகவல் கிடைத்தவுடன் யாழ்.மாநகரசபை எல்லையைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியிருந்தால் சந்தேக நபர்களைக் கைது செய்திருக்கலாம் அல்லவா- என்று நீதிவான் பொலீஸாரிடம் கேட்டதற்கு அப்படிச் செய்திருந்தால் சந்தேக நபர்களைக் கைது செய்யக் கூடியதாக இருந்திருக்கும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மேல் விசாரணை மே மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-5-6)

### புலிகள் யுத்தநிறுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கவேண்டும் என்பதில் நாம் மிகுந்த ஈடுபாடாக உள்ளோம். எங்களது யுத்தநிறுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு அங்கீகரிக்கத் தவறிவிட்டதால அது பயனற்ற முயற்சியாகப் போய் விட்டது. தமிழர் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோர்வே அரசாங்கத்தின் சலிப்பற்ற, மேன்மையுள்ள முயற்சிக்கு எமது விடுதலை இயக்கம் சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும்; ஆதரிக்கும் - என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை கௌரவித்து ஸ்ரீ லங்கா அரசாங்கத்தையும் யுத்த நிறுத்தம் செய்யுமாறு, இராஜதந்திர அழுத்தம் கொடுக்குமாறு நாம் சர்வதேச சமூகத்தை குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியா ஆகியவற்றை தொடர்ச்சியாக வேண்டி வந்தோம். ஆயினும் எமது வேண்டுகோள் பயனளிக்கவில்லை.

எமது சமாதான நல்லெண்ண முயற்சியை வரவேற்று ஊக்கப்படுத்த வேண்டிய உலக நாடுகள் சில எமது இயக்கத்தின் மீது தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்ததோடு எமது எதிரியான ஸ்ரீ லங்கா அரசுக்கு நிதியுதவி, ஆயுத உதவி மற்றும் இராணுவப் பயிற்சி ஆகியவற்றை வழங்கி வருகின்றன.

சர்வதேச சமூகத்தின் இந்த நிலைப்பாடானது, ஸ்ரீலங்கா அரசின் கடும்போக்கான இராணுவ அணுகுமுறைக்கு ஊக்கமளிப்பதாகவே அமைகிறது.

நாம் கடந்த நான்கு மாதங்களாக சுயமான முறையில் போர் நிறுத்தம் செய்து வந்ததால் இராணுவ ரீதியில் பல பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

நாம் அமைதி பேணியது காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை இழக்கவேண்டி ஏற்பட்டது.

#### 160 புலிகள் வீரமரணம்

பெருமளவில் உயிர்ச் சேதங்களையும் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. கடந்த நான்கு மாத காலத்தில் 160 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள்; 400 பேர் வரையில் காயமடைந்திருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணக் கரையோரப் பகுதிகளிலும் குறிப்பாக முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த மீனவக் கிராமங்களிலும் மக்கள் குடியிருப்புகள் மீது ஸ்ரீலங்காவின் போர் விமானங்கள் தொடர்ச்சியாகக் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்தக் கொடுமைகள் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வந்துள்ளதோடு பொது மக்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம ஏற்பட்டுள்ளது.

எமது விடுதலை இயக்கம் மிகவும் கட்டுப்பாட்டுடன் சீரிய முறையில் அமைதியைப் பேணி வந்த அதே சமயம் ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள் ஓய்வில்லாமல் தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன.

இதனால் எமது போராளிகள் மத்தியில் விரக்தியும் மனத்தளர்வும் ஏற்படும் சூழ்நிலை எழுந்தது.

#### ஆயுத இறக்குமதி

இது ஒருபுறமிருக்கையில் நாம் அமைதி பேணிய காலத்தில் ஸ்ரீலங்கா அரசு நாசகார அழிவு ஆயுதங்களைப் பெருமளவில் இறக்குமதி செய்து குவித்திருக்கிறது.

கடற்கப்பல்கள், குண்டுவீச்சு விமானங்கள் என்பன பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டு கடற்படையும் வான்படையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

நாம் அமைதி பேணிய காலத்தில் ஸ்ரீலங்கா அரசு தனது முப்படைகளையும் பலப்படுத்தி, நவீனமயப்படுத்தியுள்ளதுடன் ஒரு பெரும் போருக்குத் தன்னை தயார்ப்படுத்தி வந்திருக்கிறது.

நோர்வே அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு நாம் எம்மால் இயன்ற ஒத்துழைப்பினையும் ஆதரவினையும் வழங்கி வந்திருக்கின்றோம்.

#### நல்லெண்ணப் புறநிலை

சமாதான முயற்சிகளுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கும் நோக்குடனேயே நாம் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தம் செய்து மாதாந்த அடிபடையில் கடந்த நான்கு மாத காலமாக அமைதிநிலை காத்து வந்தோம்.

#### தெற்கிலும் வடக்கிலும்

நாம் போருக்கு ஓய்வு கொடுத்தது மட்டுமன்றி நோர்வேயின் புரிந்துணர்வு உடன்பாட்டு யோசனைகளுக்கு இசைவாக கொழும்பிலும் தெற்கின் இதர மாகாணங்களிலும் வன்முறைகளையும் தாக்குதல்களையும் நிறுத்தியிருந்தோம்.

எமது போர் நிறுத்தம் சிங்கள தேசத்தில் அமைதியினையும் ஸ்திர நிலைமையினையும் ஏற்படுத்தியதோடு சமாதானப் பேச்சுக்கான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தோற்றுவித்தது.

ஆனால் அதே காலகட்டத்தில் தமிழர் தாயகத்தில் போரும் வன்முறையும் சாவும் அழிவும் தாண்டவமாடின - என்று உள்ளது. (அ-3)

### சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி. விமலரட்ண ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

இவர்களை அடுத்த மாதம் 3 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

ஏனைய சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்காக அடுத்த மாதம் 11 ஆம் திகதி மற்றுமொரு அடையாள அணிவகுப்பு இடம்பெறும்.

SUBRA (14)
சித்தன்கேணி
2003 A/L
கலைப்பிரிவு மாணவர்களே!
உங்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்
நழுவவிடாதீர்கள்!
புதிய பிரிவு ஆரம்பம்
23-04-2001
Hi-cu. - ஸ்ரீஸ்
Log. - E.S.பவன்
Tarn. - நவக.தமிழ்ச்சந்திரன்
Dra. - A.C.பிரான்சிஸ்
Geo. - ஐங்கரன்
Hinduism - ஸ்ரீஸ்
Cri. - அஜந்தா
A.culture - அருந்தவம்
(16401)

22 வருட பூர்த்தியை முன்னிட்டு JTI வழங்கும்
இலவச கணனிப் பயிற்சி நெறி

Diploma in Microsoft Office
INTRODUCTION OF COMPUTER
MS Word 2000
MS Excel 2000
MS Access 2000
MS PowerPoint 2000
Photo Draw 2000
Duration 6 Months

Certificate Courses
MS Word 2000
MS Excel 2000
MS Access 2000
PageMaker 6.5
Auto Cad 2000
(Each 3 Months)
Visual FoxPro 6.0
CorelDraw 10.2
Pascal
D base III+
Java
C++
(Each 4 Months)

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி: 30.04.2001

மேலதிக விவரங்களை தபால் மூலமாக அல்லது நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

JAFFNA TECHNICAL INSTITUTE
NO.07, PALALY ROAD, JAFFNA.
(C/16414)

NEW SCIENCE COLLEGE
PHYSICS
By: இ.குகன் (B.Sc.)
சடப்பொருளும் கதிர்ப்பும்
(Radiation)
ஆரம்பம்:
நாளை (25.04.2001)
புதன், வியாழன்
நேரம்: 4-5 மணி
(86990)

எமது தேற்றைய வீடியோ CD வெளியீடுகள்
★ கமாண்டோ ஜெயந்தி
★ சீறிவரும் காளை
★ குழந்தையும் தெய்வமும
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்

S.L.A.S.
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2002
MON., WED. - 6.30 a.m.
ஆரம்பம்: WED. - 25.04.2001
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(87052)

## அறிவித்தல்

வலிகாமம் மேற்குப் பகுதியில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை இன்று (24-04-2001) பிற்பகல் 3.00 மணியளவில் சுழிபுரத்திலுள்ள வலிகாமம் மேற்குப் பிரதேச சபை அலுவலகத்தில் என்னைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ந.திரிலோகநாதன்
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(C/16419)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.